# 50 சத நாணயத்தில் மோசடி! பெருமளவில்

# கள்ள நாணயம்


stered as a Newspaper in Ceylon ☆ ☆ விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU

மலர் 10

தொலைபேசி எண் 49 இதழ் 23

போன் 389 National Tamil Daily தேசியதினசரி

சஹ் ஜிவரவன்க் விலைமே மாசி 21 ஜுல்ஹஜ் 4 திங்கட்கிழமை (4-3-68)


கொழும்பு, ஞாயிறு

50 சத நாணயக்குற்றியில் கள்ள நாணயம் மிகத் திறமையாக உருவாக்கப்பட்டு புழக்கத்தில் விடப்பட்டிருப்பதாக கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. பெருமளவில் புழக்கத்துக்கு வந்துள்ள இந் நாணயம் உண்மையான 50 சத நாணயம் போன்றே வார்க்கப்பட்டிருக்கிறதாம். இது சம்பந்தமாக பொலிசார் புலன்விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

## வேலை நிறுத்தம்

திருக்கோணமலை, ஞாயிறு

நேற்று முதினம் காலை வேலைக்குத் திரும்பிய இலங்கை வாத்தக ஊழியர் சங்கத்தின் அங்கத்தவர்கள் நேற்று மீண்டும் திடீர்வேலை நிறுத்தம் செய்திருக்கிறார்கள். ஏற்கனவே வேலை நீக்கம் செய்யப்பட்ட 23ரவி குமாஸ்தாக்களும் இப்போது ஒருமாதகால தவணையுடன் வேலைக்கு மீண்டும் அமர்த்தப்பட்டதே இதற்குக் காரணமாகும்.

# கச்சதீவு பற்றி இந்திய தூதா இலங்கை பிரதமர் ஆலோசனை

## யாருக்கு எத்தனை தொகுதிகள்?

### இடதுசாரிக் கூட்டணி பூர்வாங்க ஆலோசனை

கொழும்பு, ஞாயிறு

அடுத்த பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் அதனுடன் கூட்டுச்சேர்ந்துள்ள லங்கா சமசமாஜக் கட்சி, இலங்கைக் கம்யூனிஸ்ட்கட்சி ஆகியவைகள் எத்தனை தொகுதிகளில் எந்தெந்தக் கட்சி அபேட்சகர்களைப் போட்டிக்கு நிறுத்துவதென்பது பற்றி பூர்வாங்கப் பேச்சுவார்த்தைகள் நடத்திவருவதாகத் தெரிகிறது.

மூன்று கட்சிகளின் பொதுக் கொள்கைத்திட்டம் கைச்சாத்திடும் வைபவம் இம் மாதம் 19ந்திகதி சுதந்திர சதுக்கத்தில் நடைபெறும் பொதுக் கூட்டமொன்றில் கைச்சாத்திடப்பட்டு வெளியிடப்படுவதாக இருந்தது. ஆனால் அந்தக் கூட்டத்துக்கு அனுமதிமறுக்கப்பட்டதையும் வேறு காரணங்களையும் கொண்டு கூட்டம் இம் மாதம் 27ந் திகதிக்கு ஒத்திவைக்கப் பட்டிருக்கிறது. ஆனால் கூட்டம் நடைபெறும்

(8-ம் பக்கம் பார்க்க)

## மந்திரிசபை அவசரக்கூட்டம்

கொழும்பு, ஞாயிறு

கச்சதீவு விவகாரம் சம்பந்தமாக இலங்கையிலுள்ள இந்திய ஹைகமிஷனர் திரு. வை. டி. கண்டேவியா இன்று காலை பிரதமா திரு. டட்லி சேனநாயகாவைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர்.

இலங்கையின் வடக்குக் கரையோரப்பகுதிக்கும் இந்தியாவின் தெற்குக் கரையோரப் பகுதிக்கும் இடையிலுள்ள கச்சதீவு இந்தியாவுக்கா, இலங்கைக்கா சொந்தம் என்பது பற்றி மீண்டும் சர்ச்சை எழுந்துள்ளதும் இது பற்றி இலங்கை வெளிவிவகார அமைச்சு அதிகாரி ஒருவர் கருத்து வெளியிட்டதும் இதைத் தொடர்ந்து இந்திய மக்கள் பிரதிநிகள் சபையான லோகசபையிலும் தமிழ்நாடு சட்டசபையிலும் காரசாரமான விவாதங்களும் கருத்துக்களும் தெரிவிக்கப்பட்டிருந்தன.

திரு. கண்டேவியா இன்று காலை பிரதமர் திரு. டட்லி சேனநாயகாவைச் சந்தித்துப் பேசிய பின் திரு. டட்லி சேனநாயகா தமது மந்திரிசபையின் அவசரக்கூட்டத்தில் கலந்துகொண்டார்.

இக்கூட்டத்தில் இதுவரை தீர்க்கப்படாத முக்கியபிரச்

(8ம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கு உதவி

### 10 ஆயிரம் டன் அரிசி இந்தியா கடனாக கொடுக்கும்

கொழும்பு, ஞாயிறு

இலங்கைக்கு 10 ஆயிரம் டன் பர்மா அரிசியை இந்தியா கொடுத்துதவ முன்வந்துள்ளது

இந்தியாவுக்கு அரிசித் தேவை அதிகமாக இருந்தாலும் இலங்கையின் அவசியத்தேவையையொட்டி இலங்கைக்கு கடனாக இந்தஅரிசியை இந்தியா வழங்குகின்றது.

மார்ச் அல்லது ஏப்ரல் மாதங்களில் பர்மாவிலிருந்து இந்தியாவுக்கு அரிசி ஏற்றிவரும் கப்பலை இலங்கைக்குத் திருப்பிவிட இந்தியா சம்மதித்திருக்கிறது. இந்த அரிசியை இலங்கை பின்னர் திருப்பிக்கொடுத்துவிடும்.

## இல்லை என்று அழுகிறார்கள் ஆனால் இருக்கிறது நிறைய

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணப் பகுதியில் ஏராளமான 'நெஸ்பிறே' பாலுணவு சரிவர விற்கமுடியாத நிலையில் தேங்கிடப்பதாகத் தெரியவருகிறது. யாழ்ப்பாணப் பகுதியில் ஐந்து விநியோகஸ்தர்களில் யாழ். ஐக்கிய வியாபாரச் சங்கத்தில் மாத்திரம் சுமார் 1250 ருத்தல் நிறையுள்ள 500 டின்கள் இருப்பதாகவும், வேறோர் ஸ்தாபனத்தில் சுமார் 750 ருத்தல் நிறையுள்ள 300 டின்களும் மற்றோர் ஸ்தாபனத்தில் சுமார் 625 ருத்தல் நிறையுள்ள 250 டின்களும் இருப்பதாகத் தெரியவருகிறது. அத்துடன் மற்று மோர் கடையில் பெர்மிட் முறையிலும், பிள்ளைக் கூப்பன் முறைக்குமென கொடுக்கப்பட்ட சுமார் 2400 ருத்தல் நெஸ்பிறேயில் இருபது வீதத்திற்கும் குறைவாகவே வழங்கப்பட்டதாகத்தெரியவருகிறது. இப்பொழுதுஇருக்கும் மிகுதி எண்பது வீதமும் பதுங்கிக்கிடக்கிறதாம்.

இவற்றைப்போல் இதர கடைகளிலும் 'நெஸ்பிறே' பால்மாவு டின்கள் மீதமாக இருக்கலாமென நம்பப்படுகிறது.

இதுசம்பந்தமாக யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபாரச் சங்கக் காரியதரிசி திரு. பதிமநாதனை நமது நிருபர் பேட்டி கண்டபோது கூறியதாவது:-

'நெஸ்பிறே' வழங்கும் திட்டத்தை அரசாங்கம் அடிக்கடி மாற்றிவருகிறது நடைமுறையின் பிரகாரம் யாழ்ப்பாணப் பட்டினத்தில் பெருமளவு 'நெஸ்பிறே' வழங்கமுடியாமல் தேங்கிக்கிடக்கிறது.

''இலங்கைக்கு'' இறக்குமதியாகும் பாலுணவில் நூற்றுக்கு எண்பது வீதம் 'நெஸ்பிறே' யாகும் இதை ''இலங்கை நெசில்ஸ் கம்பனியார்''

(8-ம் பக்கம் பார்க்க)

## 3 தூதரகங்களில் குண்டுகள் வெடித்தன

ஹேக், மார்ச் 3

நெதர்லாந்தின் தலைநகரான ஹேக்கில் இன்று மூன்று வெளிநாட்டுத் தூதரகங்களில் குண்டுகள் வெடித்தன. முதல்குண்டு ஸ்பானிஷ் தூதரகத்தில் வெடித்தது. 15 நிமிடங்களின் பின் கிரேக்கதூதரகத்தில் குண்டு ஒன்று வெடித்து [illegible] குண்டு போர்த்துக்கீஸ் தூதரகத்தில் வெடித்தது.

வடபகுதி அசைஸ்விசாரணை

## அசிட் வீச்சு வழக்கில் எதிரிக்கு 4வருட கடூழியம்

யாழ்ப்பாணம், திங்.

'திராவகம் வீசுவது கொடூரமான குற்றம். இப்படியான கொடூரமான குற்றம் யாழ்ப்பாணத்தில் நடப்பது புதுமையானது. வாலிபர் இக் குற்றத்தை செய்திருந்தால், கடுந்தண்டனையோடு சவுக்கடியும் விதித்திருப்பேன்.'

தெல்லிப்பழை அசிட்வீச்சு வழக்கில் எதிரியான செல்லையா என்ற 65 வயது வயோதிபருக்கு 4 வருட கடூழிய சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளிக்கும் போது நீதியரசர், டாக்டர் ஏச். டபிள்யூ. தம்பையா கியூ. சி. மேற்கண்டவாறு கூறினார்.

இவ்வழக்கு கடந்த மூன்று தினங்களாக வடபகுதி அசைஸ் கோர்ட்டில் விசா

(8ம் பக்கம் பார்க்க)

வருகிற ஆகஸ்ட் மாதம் 3-ம் திகதி நடைபெறவிருக்கும் மாணவ ஆசிரிய பரீட்சை "பொது அறிவும் உள்ளூர் அறிவும்'' மாதிரி வினாவிடைகள் நாளை வெளிவரும்.

## மரண அறிவித்தல்

வேலணை கிழக்கு (அம்மன்கோவிலடி)யைச்சேர்ந்த காலஞ்சென்ற பிரபல வாவத்தை வியாபாரி மு. சின்னத்துரை, திருமதி வல்லிபுரம் ஆகியோரின் சகோதரியும், திருமதிகள் இளையதம்பி, கணபதிப்பிள்ளை, மார்க்கண்டு, செல்வி கமலாம்பிகை, செல்வர்கள் நடராசா, கனகு ஆகியோரின் அருமைத்தாயாரும் சாவகச்சேரி நகைக்கடை சி. முத்துத்தம்பியின் மாமியாருமாகிய திருமதி கதிரவேலு மாணிக்கம் 3-3-68ல் காலமாகிவிட்டார். அன்னாரின் ஈமக்கிரியைகள் (4-3-68) இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் வெள்ளைக்கடற்கரை மயானத்தில் நடைபெறும். உறவினர்களும், நண்பர்களும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

க. நடராசா, க. கனகு. பிள்ளைகள். 174

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

காணி

கொடிகாமம் புகையிரத நிலையத்திற் கருகாமையில் 45 பரப்பு தென்னங்காணி விற்பனைக்கிருக்கிறது. விபரங்களுக்கு:- ஏ. கிருஷ்ண பிள்ளை, 225, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 1747

### தேவை

பருத்தித்துறையில் திறக்க இருக்கும் தேயிலை அலுவலகத்திற்கு லிகிதர் விநியோகஸ்தர் தேவை. பிணைப் பணம் ரூபா 150. சம்பளம் ரூபா 100. விரும்புவோர் பிணைப்பணத்துடன் எஸ். ராஜா, C/o துரைசிங்கம் 4-ம் கட்டை ஆனைக்கோட்டை எனும் விலாசத்துக்கு வரவும். 1771

71வது தினம்!

ராஜா

(யாழ்ப்பாணம்)

தினசரி 2-30, 6-30, 9-30

போனாதினம்… எம். ஜி. ஆர்.-ஜெயலலிதா நடித்த

காவல்காரன்

3-வது வாரம்

நியூ காலிங்கன்

(இணுவில்)

தினசரி 6-30, 9-30 மணி

தினசரி 2-30 க்கு மெற்னி

எஸ். எஸ். ஆர். - தேவிகா நடித்த

மறக்க முடியுமா?

MANOHARA

JAFFNA

Daily at 4-45, 7-00, 9-40 a.m.

RORY CALHOUN

VIRGINIA MAYO

in

YOUNG FURY

color / scope


# கிராம சபைகளின் காலஎல்லை பின்போடப்பட்டது

வவனியா, ஞாயிறு

அலம்பில், பம்பைமடு, பூவரசங்குளம் முதலியான் குளம் ஆகிய இடங்களில் உள்ள கிராமசபைகளின் கால எல்லையை உள்ளூர் ஆட்சி அமைச்சர் திரு. மு. திருச்செல்வம் நீடித்துள்ளார் என்பது வவனியா உதவி உள்ளூர் ஆட்சி ஆணையாளர் திரு. க. நல்லநாதனுக்கு உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்குறித்த கிராமச்சங்கங்களின் திருத்தி அமைப்பதின் காரணமாக இதன் காலஎல்லை 6 மாதத்துக்குப் பின்போடப்பட்டுள்ளது.

# உடுவில் கி. ச. தேர்தல் நியமனபத்திரங்கள் தாக்கல்

## தலைவர் உட்பட மூவர் போட்டியின்றி தெரிவு

உடுவில், ஞாயிறு

உடுவில் கிராம சபையின் தேர்தலுக்கான அபேட்சகர் நியமனப் பத்திரங்கள் இன்று காலை தாக்கல் செய்யப்பட்டன.

உடுவில் கிராமசபை மண்டபத்தில் வைத்து கிராம சபையில் 12 வட்டாரங்களுக்குமான அபேட்சக நியமனப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

யாழ்ப்பாணக் கச்சேரி உதவியாளர் திரு. ஏ. கந்தசாமி முன்னிலையில் அபேட்சகர் நியமனப்பத்திரங்களை தாக்கல் செய்தனர்.

கிராமசபைத்தலைவர் திரு. ச. முத்துலிங்கம் உட்பட மூன்று வட்டாரங்களுக்கு அங்கத்தவர்கள் போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டனர்.

கிராமசபையின் 6-ம் வட்டாரத்திற்கு திரு. எம். மகாலிங்கமும், 8-ம் வட்டாரத்திற்கு திரு. எஸ். முத்துலிங்கமும், 10-ம் வட்டாரத்திற்கு திரு. எஸ். இராஜதுரையும் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டனர்.

ஏனைய ஒன்பது வட்டாரங்களுக்கும் போட்டியிடும் 24 அபேட்சகர்கள் விபரம் பின்வருமாறு:

1-ம் வட்டாரம் திருவாளர்கள் வி. சிராளசிங்கம், ரி. மாணிக்கவாசகர். 2-ம் வட்டாரம் திருவாளர்கள் பி. பாலசிங்கம், ஆர். ஜோன்பிள்ளை. 3-ம் வட்டாரம் திருவாளர்கள் எஸ். இராமநாதன், எஸ். தியாகராசா, ஏ. திருநாவுக்கரசு. 4-ம் வட்டாரம்: திருவாளர்கள் எம். கார்த்திகேசு, எஸ். கணேசு, ரி. செல்லத்தம்பி. 5-ம் வட்டாரம்: திருவாளர்கள் ஆர். பொன்னம்பலம், எஸ். இலங்கைநாதர் வி. சண்முகநாதன். 6-ம் வட்டாரம்: திரு. எம். மகாலிங்கம் (போட்டியில்லை.) 7-ம் வட்டாரம்: திருவாளர்கள் பி. இளையதம்பி, எம். நாகையா. 8-ம் வட்டாரம்: திரு. எஸ். முத்துலிங்கம் (போட்டியில்லை). 9-ம் வட்டாரம்: திருவாளர்கள் ஏ. முத்துக்குமாரசாமி, மி. பரமலிங்கம், ஏ. பரராஜசிங்கம். 10-ம் வட்டாரம்: திரு. எஸ். இராஜதுரை [போட்டியில்லை]. 11-ம் வட்டாரம்: திருவாளர்கள் ஆர். சண்முகேஸ்வரலிங்கம், எஸ். ரி. நடராசா, இ. சந்திரலிங்கம், ரி. நடராசா. 12-ம் வட்டாரம்: திருவாளர்கள் எஸ். குமாரசா: எஸ். சுப்பிரமணியம்.


REGAL JAFFNA

Daily at

4-40, 7-00, & 9-45 p.m.

[Revwing by Public Demand]

BECAUSE OF EVE

[Adults only]


## டாக்ஸி சாரதிக்கு பாராட்டு

சங்கானை, ஞாயிறு

"இந்நாட்டில் இருக்கும் டாக்ஸி சாரதிகளுக்கு ஓர் எடுத்துக்காட்டாக திரு. கே. ஜி. டி. பண்டார கண்ணியத்துடனும் நேர்மையுடனும் விளங்குகிறார். டாக்ஸியில் தவறுதலாக விட்டுச் சென்றபத்தாயிரம் [10,000] ரூபா பெறுமதியான தங்க நகைகளையும் ரொக்கப்பணத்தையும் திரும்ப உரிமையாரிடம் சமர்ப்பித்து அவர்களின் நன்மதிப்பைப் பெற்றுக் கொண்டதற்கு எவரும் பாராட்டாமல் விடமுடியாது". என சங்கானை ஐக்கிய சனசமூக நிலைய மாதாந்தக் கூட்டத்தில் தலைமை வகித்துப் பேசிய நிலையத் தலைவர் திரு. த. பாலசுப்பிரமணியம் குறிப்பிட்டார்.

டாக்ஸி சாரதி திரு. பண்டார பற்றி மேலும் பேசுகையில் இது போன்ற நற்செய்கைகளை மற்றும் சாரதிகள் உட்படசகலரும் கடைப்பிடிப்பாரேயானுல் அவர்கள் பொதுமக்களின் நன் மதிப்பைப் பெறுவர் என்றார்.

பாராட்டு தெரிவித்து நற்செய்தி [illegible] ஜி. டி. பண்டாராவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

# செய்திச் சுருக்கம்

### முற்றவெளி விவகாரம்

திருக்கோணமலை முற்றவெளிப் பிரச்னை இங்கு நடைபெற்ற நகரசபைக் கூட்டத்தில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. ஆறு நிபந்தனைகளின் பேரில் திருமலை முற்றவெளியை அரசாங்கம் நகரசபையிடம் கையளிக்கும் என திருமலை அரசாங்க அதிபர் திரு. சோமபாலகுணதீர நகரசபைக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார். முற்றவெளிச்சூழ் கட்டிடம் கட்டுவதாக இருந்தால் அரசாங்க அதிபரின் அனுமதி பெறவேண்டும் என்பது அந்த ஆறு நிபந்தனைகளில் ஒன்று

ஃ ஃ

### பிணையில் சென்றார்

பெண்ணின் தங்கச்சங்கிலி திருடமுயற்சித்ததாக குற்றஞ்சாட்டி கைதுசெய்யப்பட்டவரை ரூ. 750 பிணையில் செல்ல இரத்தினபுரி நீதிபதி அனுமதித்தார். இரத்தினபுரியைச்சேர்ந்த எம். அப்துல் ஹமீது என்பவர் வி. ஜயனம்மா என்ற பெண்ணின் தங்கச் சங்கிலியை திருடமுயற்சித்ததாக குற்றம்சாட்டப்பட்டிருந்தது. மறு விசாரணை இன்று நடைபெறும்.

ஃ ஃ

### புதிய தலைவர்

வவனியா ப. நோ. கூட்டுறவுச் சமாசத்திற்கு புதிய தலைவராக வவனியாதெற்கு காரியாதிகாரி திரு. என். பூரணலிங்கம் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

ஃ ஃ

### 3-1 கோல்களால் வெற்றி

வவனியா தமிழ் மகா வித்தியாலய மாணவர்களுக்கும் மேற்படி வித்தியாலயப் பழைய மாணவர்களுக்கு மிடையே நடைபெற்ற சிநேகபூர்வமான உதை பந்தாட்டப் போட்டியில் மகா வித்தியாலய மாணவர் 3-1 கோல்களால் வெற்றியீட்டினர்

## இடமாற்றம்

சுழிபுரம், ஞாயிறு

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் கடமையாற்றிய திரு. பொ. செல்வரத்தினம் இம்மாதம்முதல் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரிக்கு விஞ்ஞான ஆசிரியராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.


காங்கேசன்துறை பட்டினசங்கம்

## வேலை விளம்பரம்

காங்கேசன்துறைப் பட்டினசங்கத் தலைவரால், கீழ்க் குறிப்பிடும் இரண்டு வேலைகளுக்கும் விண்ணப்பப்பத்திரங்கள் அழைக்கப் படுகின்றன.

1. 5-ம் வட்டாரத்தில் உள்ள மயிலிட்டிச் சந்தைக்கு அஸ்பெஸ்ரோஸ் ஓடிட்டு வேய்தல்.
2. 3-ம் வட்டாரத்தில் உள்ள கதிரியாவத்தை வீதிக்குக் கல்லுப் பதித்துத் தார் ஊற்றுதல்.

விண்ணப்பப் பத்திரங்களை மேற்படி பட்டினசங்கத்தின் காரியாலயத்தில் 14-3-68ம் திகதி காலை 12-00 மணி வரையும் நன்னம்பிக்கைப் பணமாக ரூபா 25/-ம், பத்திரத்துக்கு ரூபா 2/-ம் கட்டிப் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பக்காரர்கள் அரசாங்கத்தில் அல்லது தலதாபனத்தில் ரூபா 10,000/-க்கு குறையாத தொகைக்குப் பதிவுசெய்யப்பட்டவர்களாக இருக்கவேண்டும்.

விண்ணப்பப் பத்திரங்கள் இணைப்பிரதியுடையதாக இரு பிரதிகளும் 1968-ம் ஆண்டு மார்ச் [பங்குனி] மாதம் 15-ம் திகதி நடுப்பகல் 12-00 மணிக்குப் பிந்தாமல், பட்டினசங்கக் காரியாலயத்தில் வைக்கப்பட்டுள்ள விண்ணப்பப் பெட்டியிலோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பவேண்டும்.

இதைப்பற்றிய விபரங்கள் யாவும் பட்டினசங்கக் காரியாலயத்தில் கந்தோர் நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

ஆ. வ. சதாசிவம்,
தலைவர்
காங்கேசன்துறை,
பட்டினசங்கம்.

பட்டினசங்க அலுவலகம்,
காங்கேசன்துறை,
29-2-1968. 473


## இலங்கை கலைஞருக்கு பழனியில் பொன்னாடை

உடுவில், ஞாயிறு

உரும்பிராயைச் சேர்ந்த நாதஸ்வரவித்துவான் திரு. ஏ அங்கப்பன் சென்றமாதம் நடுப்பகுதியில் பழனி தேவஸ்தானத்தில் வைத்து பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

பழனி நவவீர செங்குந்த சபையினரின் சார்பில் திரு. ஏ. அங்கப்பனுக்கு பொன்னாடை போர்த்தும் வைபவம் நடைபெற்றது.


இப்பொழுது திரையிடப்படுகிறது!

கிங்ஸ்லி [கொழும்பு] — பிளாஸா [வெள்ளவத்தை] — வெலிங்டன் [யாழ்ப்பாணம்]

விஜயா [மட்டுநகர்] — ஸ்ரீகிருஷ்ணு [திருமலை] — விஜிதா [ஹட்டன்]



சிவாஜி கணேசன்— சாவித்திரி

ஜெமினி கணேசன், பத்மினி,

கே.ஆர்.விஜயா, தேவிகா, நாகேஷ்

மற்றும் பலர் நடிக்கும்

# சரஸ்வதி சபதம்

(ஈஸ்ட்மென் கலர்)

## ஜெனரல் இன்டஸ்றீஸ் லிமிட்டெட்

பழைய டயர்களை புதுப்பிக்கும் வேலைகளுக்கும்

சகலவிதமான ரப்பர் சாமான்களுக்கும்

தொழில் நிலையங்களுக்குத் தேவையான

தற்காலிக கட்டட தளபாடங்கள்

ஆகியவற்றுக்கும்

எம்முடன்தொடர்பு கொள்ளுங்கள்

20, ஸ்ரான்லி வீதி — யாழ்ப்பாணம்.

45, அம்பலவாணர் ரோட்,

யாழ்ப்பாணம்

போன்: 7024


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய - பாகிஸ்தான் நல்லுறவு பற்றி திரு. தேசாய் நம்பிக்கை

புதுடில்லி, மார்ச் 3

**இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையேயான முக்கிய பிரச்னைகள் யாவும் இன்னும் சில வருடங்களில் சுமுகமாகத் தீர்க்கப்பட்டு விடுமெனத் தாம் நம்புவதாக இந்திய துணைப் பிரதமா திரு. மொரார்ஜி தேசாய் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.**

புதுடில்லியில் நடைபெறும் ஐ. நா. வர்த்தக, அபிவிருத்தி மகாநாட்டிற்கு வந்துள்ள பாகிஸ்தான பத்திரிகையாளர் ஒருவருக்களித்த பேட்டியின் போதே, திரு. தேசாய் இவ்வாறு கருத்து வெளியிட்டார்.

இந்தியா எப்போதுமே பாகிஸ்தானுடன் நட்புறவையே நாடிவந்துள்ளதாகவும், பாகிஸ்தானுக்கு நீதியான முறையிலேயே எந்தப் பிரச்னையிலும் நடந்து கொண்டுள்ளதாகவும் திரு. தேசாய் வலியுறுத்தினர்.

ஆனாலும், ஏதோ இந்தியா எப்போதுமே பாகிஸ்தானின் நலன்களுக்கு விரோதமான மனப்பான்மையையே கொண்டுவிளதுபோல அதற்செதிராகச் செய்யப்படும் பிரசாரம் பற்றித் துணைப் பிரதமர், பாகிஸ்தான் பத்திரிகை நிருபரிடம் தமது வருத்தத்தைத் தெரிவித்தார்.

## ரஷ்யா அனுப்பிய விண்வெளி நிலையம்

மாஸ்கோ, மார்ச். 3

ரஷ்யா விண்வெளியில் தனது நான்காவது தானியங்கிவிண்வெளிநிலயத்தை அனுப்பியுள்ளது.

'ஸோண்ட்-4' என அழைக்கப்படும் இந்த விண்வெளி நிலையம் விண்வெளியில் சுற்றும் மற்றுமொரு விண்வெளிக்கலத்திலிருந்து வெளியேற்றப்பட்டது.

பூமிக்கருகேயுள்ள விண்வெளிப்பிரதேசங்கள் பற்றிய விபரங்களை அறிவதே இந்த விண்வெளி நிலையம் அனுப்பப்பட்டதின் நோக்கமாகும்.

## ரொடீசியா மரணதண்டனை விதித்த 3 ஆபிரிக்கர் தண்டனையைக் குறைத்து எலிசபெத் ராணி உத்தரவு

லண்டன், மார்ச். 3

சட்ட விரோதமான ரொடீஷிய சிமித் ஆட்சி மரண தண்டனை விதித்துள்ள 3 ஆபிரிக்கர்களுக்கு, பிரிட்டிஷ் ராணி எலிசபெத், மன்னிப்பு அளித்து, தண்டனையை ஆயுட்கால சிறைவாசமாகக் குறைத்துள்ளார்.

இந்த 3 ஆபிரிக்கர் மீதும் கொலைக் குற்றம் சுமத்திய ரொடீஷிய அரசாங்கம், அவர்களுக்கு மரண தண்டனை விதித்திருந்தது. அந்தமரண தண்டனையை நிறைவேற்ற வேண்டாமென பிரிட்டிஷ் அரசாங்கம் ரொடீஷிய அரசாங்கத்திடம் எச்சரித்திருந்தது. ஆனால் அந்த எச்சரிக்கையைப் பொருட்படுத்தாது. ரொடீஷிய உயர்நீதிமன்றம், பிரிவு கவுன்ஸிலுக்கு அப்பீல் செய்யும் உரிமையையும் 3 ஆபிரிக்கர்களுக்கும் மறுத்துள்ளது.

எலிசபெத் ராணியின் உத்தரவினால், பிரிட்டனுக்கும் ரொடீஷியாவுக்குமிடையேயான சட்டப் பிரச்னை ஓர் உச்சக் கட்டத்தை அடைந்துள்ளது.

# தென்னுபிரிக்கா கைது செய்த 33 தெ.மே. ஆபிரிக்கர்

## பந்தோபஸ்து சபை விவகாரத்தை விவாதிக்கும்

நியூயோர்க், மார்ச் 3

தென்னுபிரிக்கா கைது செய்த 33 தென்மேற்குஆபிரிக்கர்களின் விவகாரம்பற்றி விவாதிக்க ஐ. நா. பந்தோபஸ்துசபை நாளை இங்கு கூடவிருக்கிறது.

நாளைய கூட்டத்தை, இந்தியா உட்பட 7 பந்தோபஸ்துசபை அங்கத்தினர் அழைத்துள்ளார்கள். இந்நாடுகள், கைதிகள் விவகாரம் சம்பந்தமாக ஒரு பிரேரணையைச் சபையில் சமர்ப்பிக்கவிருக்கின்றன.

இக்கைதிகளைத் தென்னுபிரிக்கா விடுதலை செய்ய மறுத்தால், தென்னுபிரிக்காவுக்ெதிராகப் பயனுள்ள தடை நடவடிக்கைகளைச் சபை எடுக்க வேண்டுமென இந்நாடுகள் வலியுறுத்தும்.

## யூதாண்டை பார்த்தசாரதி சந்தித்தார்

நியூயோர்க், மார்ச், 2

ஐ. நா. பொதுச்சபையில் இந்தியாவின் நிரந்தரப் பிரதிநிதியாகக் கடமையாற்றும் திரு. பார்த்தசாரதி, நேற்று ஐ. நா. பொதுக் காரியதரிசியைச் சந்தித்து. மேற்கு ஆசியா, வியட்னும் உட்படப் பல பிரச்னைகளை யிட்டுப் பேசினர்.

திரு. பார்த்தசாரதி, நியூயோர்க் வந்துள்ள மேற்கு ஆசிய விசேஷ பிரதிநிதியான டாக்டர் குனர் ஜாரிங்கையும் சந்தித்துப் பேசியுள்ளார்.

டாக்டர் ஜாரிங், இன்று யூதாண்டைச் சந்திக்கிருர். அப்போது அவர் தமது மேற்கு ஆசிய சமாதான முயற்சியின் விபரங்களை யூதாண்டிடம் தெரிவிப்பார்.

இந்திப்படம்

# திரையிடும் தியேட்டர்களுக்கு பொலீஸ் பாதுகாப்பு

## தமிழக அரசு முடிவு

சென்னை, மார்ச் 3

இந்திப் படங்களைத் திரையிடும் சினிமாத் தியேட்டர்களுக்குப் பொலிஸ் பாதுகாப்பு அளிக்கப்படுமெனத் தமிழக அரசாங்கம் அறிவித்துள்ளது.

இத்தத் தகவலைப்பொதுப் பணி மந்திரி திரு. மு. கருணுநிதி நேற்று சென்னை கீழ்சட்டசபையில் பேசுகையில் தெரிவித்தார்.

இந்தி ஆதிக்கத்தை எதிர்ப்பதே தமிழக அரசாங்கத்தினதும், தி. மு. க. வினதும் கொள்கையேயன்றி இந்தி மொழியையே எதிர்ப்பதல்ல என்று திரு. மு. கருணுநிதி விளக்கினுர்.

## சட்ட விரோதமாக நகைகளை வைத்திருந்தாராம்

அளவெட்டி, ஞாயிறு

தெல்லிப்பளையையடுத்த வீமன் காமப்பகுதியில் பல ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க நகைகளை சட்டவிரோதமாக வைத்திருந்ததாக ஒருவரை பொலிசார் கைது செய்தனர்.

காங்கேசன்துறைப் பொலிஸ் பொறுப்பதிகாரி திரு. எஸ். வி. மூர்த்தி தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டியினரே இந்நகைகளைக் கைப்பற்றினர்.

# தமது முதற் கடமை பற்றி சுகாதார அமைச்சர்

களுவாஞ்சிக்குடி, ஞாயிறு

ஆரோக்கியம பரமலாபம் என்று புத்தர் பெருமான் கூறியுள்ளார். அதன்படி ஆரோக்கியம் எத்தனை முக்கியமானது, எவ்வளவு அவசியமானது என்பதை நான் நன்குணர்ந்துள்ளேன். இந்த நாட்டிலுள்ள மக்கள் அனைவரும் நல்ல ஆரோக்கியத்துடன் வாழ சுகாதார அமைச்சர் என்ற முறையில் என்னுல் இயன்றளவுசேவை செய்வேன் என்று களுவாஞ்சிக்குடி பிரசவ விடுதியில் புதிதாய் அமைக்கப்பட்ட கிராம வைத்திய விடுதிச்சாலையை திறந்துவைத்துப் பேசிய சுகாதார அமைச்சர் திரு. ஈ. எல். சேனநாயக்கா கூறினர்.

கூட்டத்திற்கு பட்டிருப்பு எம். பி. திரு. எஸ். எம். இராசமாணிக்கம் தலைமை தாங்கினர். களுவாஞ்சிக்குடி சைவமகாசபைக் காரியதரிசி திரு. கோ. பாக்கியராசாவின் தேவாரத்தோடு விழா ஆரம்பமானது. பட்டிருப்பு முதலாம்தர மகாவித்தியாலய மாணவிகள் வாழ்த்துப்பா பாடினுர்கள். தொடர்ந்து குருக்கள்மடம் தோற்றுத்திவு பாடசாலை சாரணர்களின் அணிவகுப்பைப் பார்வையிட்டதுடன் பட்டிருப்பு மகாவித்தியாலய ஆசிரியர்களதும் மாணவர்களதும் அணி வகுப்பை ஏற்றுக்கொண்டார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது:-

தற்சமயம் நாட்டின் பல பாகங்களிலும்அதிவேகமாக மலேரியா பரவுகிறது இதை தடைசெய்வது தான் எனது முதற்கடமை. பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா மலேரியா பரவுவதை அழித்தொழிக்க என்னென்ன வழிவகைகளைக் கையாள முடியுமோ அத்தனையும் செய்யும்படி என்னைப்பணித்துள்ளார்.

மலேரியாத்தடை இயக்கத்தில் நாம் தீவிரமாக ஈடுபட்டதால்தான் வெற்றியீட்டிக்கொண்டு வருகின்ருேம். மிக விரைவில் இந்நாட்டிலிருந்தே மலேரியாவை ஒழித்துக்கட்டிவிடுவோம். இந்த நாட்டின் சுகாதார சேவைகளைப் பூர்த்திசெய்வதற்காகவும் விஸ்தரிப்பதற்கும் முதற்படியாக காலியாகவுள்ள வைத்தியர்களினதும் தாதிமார்களினதும் மருத்துவ மாதுகளினதும் இடங்களை நிரப்புவதற்கு ஏற்ற ஒழுங்குகளைச்செய்துகொண்டுவருகின்றேன். இந்நாட்டில் கிராமப்பகுதிகளின் சுகாதார தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கு ஏராளமான நடமாடும் வைத்தியசாலைகளை ஏற்படுத்த வேண்டியுள்ளது.

தலைமைதாங்கிய திரு. சி. மு. இராசமாணிக்கம் எம். பி. கூறியதாவது:-

மாகாண வைத்தியசாலையில் ஏற்பட்டுவரும் இடநெருக்கடியையும் மற்றைய வசதிக்குறைவையும் தீர்ப்பதற்கு கிராமப் பகுதிகளில் நடமாடும் வைத்தியசாலைகள் ஏற்படுத்தவேண்டும். இதன் மூலம் சிறு சிறு நோய்க்காக மாகாணவைத்தியசாலைகளில் போயிருப்பவர்களின் தொகைகுறையும் 80 சதுர மைல்களைக் கொண்டதும்சுமார் 60,000 மக்கள் வாழும் இத்தொகுதியிலுள்ள ஒரே ஒரு கிராம வைத்தியசாலை இதுதான். பல குடியேற்றத் திட்டங்கள் அமைந்தபகுதி இது இப்பகுதிக்கு நடமாடும் வைத்தியசாலையின் சேவை மிகமிக அவசியமானதாகும் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

சந்தேகத்தின்பேரில்கைது செய்யப்பட்டவர் பிணையில் விடப்பட்டுள்ளார்.

# புடாபெஸ்ட் மாநாட்டில் ஹங்கேரி எச்சரிக்கை

புடாபெஸ்ட், மார்ச் 3

உலகக் கம்யூனிஸ்ட் இயக்கத்தைத் தேசியப்போக்குகள் பலவீனப்படுத்த முயல்வதாக, புடபெஸ்டில் நடைபெறும் உலகக் கம்யூனிஸ்ட் மகாநாட்டில் ஹங்கேரி எச்சரித்துள்ளது.

உலகக் கம்யூனிஸ்ட் இயக்கத்தைப் பிளவுபடுத்துவதாகச் சீனு மீது ஹங்கேரி குற்றஞ்சாட்டியது.

வியட்னும் முதலியமுக்கிய பிரச்னைகளில், மற்றைய கம்யூனிஸ்ட் நாடுகளுடன் சேர்ந்து . ஒற்றுமையாக உழைக்குமாறு ஹங்கேரிப் பிரதிநிதி, சீனுவைக்கேட்டுக் கொண்டார்.

## திருட்டு

யாழ்ப்பாணம், திங்கள்

கல்லூரில் அதியர் ஒருவரின் வீட்டிலிருந்து பணமும் நகையும் களவாடப்பட்டுள்ளதாக பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது. இச் சம்பவம் தும்பளையில்நேற்று முன்தினமிரவு நடைபெற்றது.

இங்கு வசிக்கும் கணேசன் என்பவரது வீட்டிலிருந்தே சுமார் 2000 ரூபா பெறுமதியான பணமும் நகையும் களவாடப்பட்டுள்ளதாக பொலிஸ் புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இக்களவு சம்பந்தமாக இதுவரை எவரும் கைதுசெய்யப்படவில்லை. (எ.நி.)

## அல்ஜீரியாவில் முகம்மது ரியாட்

அல்ஜியர்ஸ். மார்ச்.3

அல்ஜீரியாவுக்கு விஜயம் செய்துள்ள ஐக்கிய அரபுக் குடியரசு வெளியுறவு மந்திரி திரு. முகம்மது ரியாட், அல்ஜீரியப் பிரதமர் திரு. பூமோடியானையும், அல்ஜீரிய வெளியுறவு மந்திரியையும்சந்தித்துப் பேச்சுவார்த்தைகள் நடத்தியுள்ளார்.

திரு. ரியாட், ஐ. அ. குடியரசுத் ஜனுதிபதி நாஸரிடமிருந்து ஒரு விசேஷசெய்தியை அல்ஜீரியப் பிரதமர் திரு. பூமோடியானிடம் கை[illegible] அச்செய்தியில் அடங்கிய விடயம் என்னவென்பது வெளியிடப்படவில்லை.

# உலகின் மிகப் பெரிய விமானம்

## உதைபந்தாட்ட மைதான நீளமும் 6 மாடி கட்டிட உயரமும்

### அமெரிக்கா தயாரித்துள்ளது

வாஷிங்டன், மார்ச். 3

அமெரிக்கா உலகிலேயே மிகப்பெரிய விமானமெனக் கருதப்படும் விமானமொன்றைத் தயாரித்துள்ளது.

இந்தவிமானத்தின் பெயர் 'ஸி-5-கலக்ஸி' ஆகும். இந்த விமானம் ஓர் உதைபந்தா[illegible] மானதாகும். அது 6 மாடி உயரமானது.

இராணுவத் துருப்புகளை கொண்டு செல்வதற்கே இவ் விமானம் பயன்படுத்தப்படும். உலகின் எப்பகுதியிலும் ஒரு நாளிலேயே துருப்புக்களைக் கொண்டு போய் விடக்கூடிய சக்தி வாய்ந்தது இந்த விமானம்.

இவ்விமானம், டாங்கிகள் துப்பாக்கிகள், மற்றும் இராணுவ உபகரணங்கள் உட்பட 20 காலாட் படைகளைக் கலிபோர்னியாவிலிருந்து ஜப்பானுக்கு ஒரு சிலமணி நேரத்திலேயே கொண்டுசெல்லும்.

முதலாவது விமகனம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட வைபவத்தில் கலந்து கொண்ட அமெரிக்க ஜனுதிபதி ஜோன்சன் 'அமெரிக்காவின் இராணுவப் பலத்தில் இவ் விமானம் ஒரு பெரும் முன்னேற்றத்தைக் குறிக்கிறது என்று கூறினுர்.

கலக்ஸி விமானம் இன்னும் ஒரு வருடத்தில் சாதாரணமாக இயங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

இங்குள்ள எதுவும் உமக்குச் சொந்தமல்ல என்றஉண்மையை மறக்காதீர் நீங்கள் உள்ளிட்டு எல்லாமே இறைவனின் உடமை. எனது எனது என்பது அஞ்ஞானத்தின் அறிகுறியே.

— சுவாமி ராமதாஸ்


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பிலவங்க வருஷம் மாசி மாதம் 21ம் திகதி [4-3-68]


## கச்சதீவு விவகாரம்

கச்சதீவு யாருக்குச் சொந்தம்? இந்தியாவுக்கா இலங்கைக்கா? சில வருடங்களுக்கு முன்னர் எழுந்து அடங்கிய இந்தக் கேள்வி மீண்டும் ஒலிக்கத் தொடங்கியிருக்கிறது.

இந்தியாவும் இலங்கையும் உரிமை பாராட்டுவதால் பிஜித்தீவு, மாலைதீவு போன்று இயற்கை வளமும் தொழில் வளமும் நிறைந்து, அந்நியர் அத்தீவுகளின் செல்வத்தைச் சுரண்ட முன்வந்தது போல கச்சதீவும் ஏதோ செல்வம் கொழிக்கும் வளமுள்ள தீவு என நினைக்கக்கூடாது. குடிக்கத் தண்ணீர் கூடக் கிடைக்காத, மனித சஞ்சாரமற்ற சிறுதீவு தான் கச்சதீவு. இலங்கையின் வடக்கேயுள்ள தீவுக் கூட்டங்களில் ஒன்றான நெடுந்தீவிலிருந்து எட்டு மைல் தொலைவிலும் தமிழ் நாட்டின் தெற்குக் கரைக்குச் சிறு தொலைவில் இத்தீவு இருக்கிறது. அங்கு ஓர் அந்தோனியார் ஆலயம் இருக்கிறது. ஆண்டுக்கொரு தடவை அங்கு நடைபெறும் திருநாளில் இலங்கையிலிருந்தும் இந்தியாவிலிருந்தும் பக்தர்கள் சென்று கலந்துகொள்வது வழக்கமாக இருந்து வந்தது. அந்தோனியார் ஆலயத்தைத்தவிர கச்சதீவு வேறு எந்தவித முக்கியத்துவமும் பெற்றிருக்கவில்லை. ஆனால் சென்ற சில வருடங்களாக கச்சதீவில் நடைபெறும் திருநாளை சிலர் கள்ளக்கடத்தல், சட்டவிரோதக் குடியேற்றம் ஆகிய தேசத்துரோகச்செயல்களுக்குப் பயன்படுத்துவதாகக் கண்டுபிடிக்கப்பட்டு இலங்கைப் பொலிசாரும் இராணுவத்தினரும் சில தீவிர தடுப்புநடவடிக்கைகளை மேற்கொண்டனர். சில வருடங்களுக்கு முன்னர் இலங்கை விமானப் படை கச்சதீவை தனது பயிற்சித் தளமாகஅமைத்துக்கொள்ள முன்வந்த போதும் கச்சதீவுயாருக்குச் சொந்தம் என்ற சர்ச்சை எழுந்துள்ளது. எனினும் அது பெரிது படுத்தப்படாமல் அடங்கி விட்டது

ஆனால் இன்று கச்சதீவு பற்றிஎழுந்துள்ளசர்ச்சை இந்தியாவிலும் இலங்கையிலும் சில தீவிர வாதிகளால் பெரிது படுத்தப் படுகிறது. உள்நாட்டு அரசியல் இலாபத்தை நோக்கமாகக் கொண்டு கச்சதீவுப் பிரச்னை பெரிது படுத்தப்படக்கூடும். சந்தர்ப்பத்தைச் சாதகமாக்கிக் கொள்ள வெளியாரும் இதில் தலையிட முன்வரலாம். எனவே இது விஷயத்தில் இலங்கை, இந்திய அரசாங்கங்களும் பொது மக்களும் நிதானத்துடன் நடந்து கொள்ளவேண்டியது மிக மிக அவசியம்.

இலங்கை இந்திய நல்லுறவு வலுப்பெற்று வளர்ந்து வருகிறது. இரு நாடுகளுக்குமிடையில் சமீபத்தில் பல பல ஒப்பந்தங்களும் கைச்சாத்திடப்பட்டிருக்கின்றன. ஒன்றுக்கும் பிரயோசனமற்ற, மனிதர் வசிப்பதற்கும் உதவாத ஒரு சிறிய கச்சதீவுக்காக இலங்கை-இந்திய நல்லுறவைச் சீர்குலைக்கும் எந்தச் செயலையும் இருதரப்பினரும் செய்துவிடக்கூடாது. அமைதியான முறையில் பேச்சுவார்த்தை மூலம் இச்சிறு பிரச்னை சுலபமாகத்தீர்ந்துவிடமுடியுமென்பதே நமது நம்பிக்கை.

# காந்திஜிக்கு வணக்கம் செலுத்த கடமைப்பட்டுள்ளோம்

— டாக்டர் என். எம்.

## கொழும்பில் நூற்றாண்டு விழா தேசியசபை அமைக்கப்பட்டது

### கவர்னர்ஜெனரல், பிரதமர், திருமதிசிறிமாபோஷகர்கள்

கொழும்பு, ஞாயிறு

மகாத்மா காந்தியடிகள் ஆத்மீக சக்தியை வளர்த்ததோடு மட்டுமல்லாமல்ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடிய பெரிய வீரன் இதன் காரணமாக இந்தியாவில் மட்டுமல்லாமல் உலகம் முழுவதிலுமே ஏகாதிபத்தியத்தை எதிர்த்த சக்திகள் புத்துயிர் பெற்றுப் பலமடைந்தன. ஆசியநாட்டுமக்கள் விடுதலை பெற்று சுயமரியாதையுடன் தலைநிமிர்ந்து நிற்கும் வீரநிலைமையைத் தேடித்தந்த அந்த ஒரு பெரும் சேவைக்கு மட்டுமாகுதல் மகாத்மா காந்தியடிகளுக்கு நாம் நன்றியும் வணக்கமும் செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம்.

1969ம் ஆண்டிலே நிகழவிருக்கும் மகாத்மாகாந்தியடிகளின் நூற்றாண்டுவிழாக்கொண்டாட்டத்தை மிகச் சிறப்பாக நாம் கொண்டாடவேண்டியவர்களாக இருக்கின்றோம், இந்த சிறந்த முயற்சிக்கு எதிர்க்கட்சியினராகிய நாம் பூரண ஒத்துழைப்புத்தந்து விழாவைச் சிறக்கச் செய்ய பேராவலுடன் இருக்கின்றோம்.

என டாக்டர் என். எம். பெரேரா பொறளை பௌத்த வாலிபர் சங்க மண்டபத்தில் நடைபெற்ற காந்தியடிகள் நூற்றாண்டுவிழா தேசிய சபை அமைப்புக் கூட்டத்தில் அபிப்பிராயம் தெரிவித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

இக்கூட்டத்திற்கு சபைத்தலைவரும் இலங்கை இந்திய நட்புறவுச் சங்கத்தலைவருமான திரு.ஏ. ரத்னாயக்கா தலைமை வகித்தார். இந்தக் கூட்டம் அகில இலங்கைக் காந்திசேவா சங்கம், லங்கா சர்வோதய சிரமதான சங்கம் மகாபோதிசங்கம், இலங்கை இந்திய நட்புறவுச் சங்கம் ஆகியவற்றின்கூட்டு முயற்சியால் கூட்டப்பட்டது.

இக்கூட்டத்துக்கு இலங்கை இந்திய தூதவர் திரு. வை. கண்டேவியா, கொழும்புமேயர் ஜனாப் ஏ.காதர் மந்திரிமார் மற்றும் எம்.பிக்கள் சமூகசேவா இயக்கங்களைச் சேர்ந்த பல பிரமுகர்கள் கலந்து கொண்டனர், பிக்குகளின் பிரார்த்தனையுடன் கூட்டம் ஆரம்பமானது

அகில இலங்கைக் காந்தீய சேவா சங்கத் தலைவர் முதலியார் செ. சின்னத்தம்பி இக்கூட்டத்தில் பேசியதாவது;-

"இதுவரை உலகவரலாறு கண்ட பொருளாதார சமுதாய, அரசியல் தத்துவங்கள் யாவும் தோல்வியே அடைந்துவருகின்றன. இத் தத்துவங்கள் எதுவும் உலகத்தில் அமைதியையும் நல்வாழ்வையும் நிலைநாட்டுவதில் வெற்றியடையவில்லை பகைமையும், போரும் உலகிடை இன்றும் வளர்ந்து கொண்டிருப்பதையே நாம் காண்கின்றோம். அணுகுண்டு முதலிய அழிவுக்கருவிகள் செய்து குவிக்கப்பட்டு நாசநெறியில் நடைபோட்டுக் கொண்டிருக்கும் உலகத்தை காந்தியடிகள் அளித்த சர்வோதய தத்துவம் ஒன்றே காப்பாற்றவல்லது. மகாத்மாஜீயின் நூற்றாண்டுவிழாக் கொண்டாட்டத்தை உலகிடை அவரளித்த சர்வோதய தத்துவத்தைப் பரப்புவதற்குரிய ஒருவாய்ப்பாகப் பயன்படுத்தவேண்டும்."

"இந்த நாட்டில் காந்தியவாதிகளாகிய நாமனைவரும் சர்வோதய இயக்கம் என்னும் புனித புரட்சி இயக்கத்தை தீவிரமாக வளர்த்து வெற்றிகாணவேண்டும் 'யாவர்க்கும் வாழ்வு' என்ற குறிக்கோளையுடைய இந்த உயர்ந்தசர்வோதயப்புரட்சி இயக்கத்தில் புரட்சி வாதிகளின் தலைமை தாங்கிநிற்கும் சிந்தனையாளரும்கல்விமானுமாகிய டாக்டர் என். எம் பெரேரா போன்ற சோஷலிஸ வாதிகளெல்லாம் சேர்ந்து கொள்ளவேண்டுமென அன்புடன் அழைக்கின்றோம்.

இந்தியாவிலே மிகத்தீவிர மாக்ஸிஸவாதியாக விளங்கிய ஸ்ரீ ஜெயப்பிரகாஷ் நாராயண் போன்றவர்கள் இன்று சர்வோதய முகாமில் முன்னணியில் நின்று உழைப்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்."

கொழும்பு மேயர் ஜனாப் ஏ. காதர், திரு. ச. சோமசுந்தரம், ஞானசிகதேரோ, இலங்கை-இந்திய தூதுவர் திரு. வை. கண்டேவியா, டாக்டர் கலீல் ஆகியோரும் பேசினார்கள். காந்தி நூற்றாண்டுவிழாக் கொண்டாட்டத்தை இலங்கையில் சிறப்பாக நடத்துவதற்கு ஒரு தேசிய சபையும் நிர்வாக சபையும் அமைப்பதென்ற தீர்மானத்தை கூட்டத்துக்குத் தலைமை வகித்த செனட்டர் ஏ. ரத்னாயக்க பிரேரிக்க, ஜனாப் ஏ. அசீஸ் ஆமோதித்தார். தீர்மானத்தைச் சபை கரகோஷம் செய்து ஏகமனதாக வரவேற்றது.

காந்தி நூற்றாண்டு விழா தேசியசபையின் போஷகராக இலங்கையின் கவர்னர் ஜெனரலும், உப போஷகர்களாக பிரதமர் டட்லி சேனநாயக்கா, எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா, முன்னாள் பிரதமர் சேர் ஜோன் கொத்தலாவலை ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர் இத்தேசியசபையின் தலைவராக செனட்டர் ஏ. ரத்னாயக்காவும், உப தலைவர்களாக பல்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் சமய சமூக சபைகளின் தலைவர்களுமாக 15 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

செயலாளராக திருவாளர்கள் ஏ. ரி. ஆரியரத்ன, கே. ஸி. தங்கராஜா, லலிதா ஹேவவித்தாரண, அல்பிரட் எதிரிசிங்க, பாலித வீரசிங்க ஆகியோரும், உப செயலாளர்களாக திருவாளர்கள் சோ. தம்பிப்பிள்ளை, எம். ஏ திலகரத்தின, பியசோம மெடிஸ் ஆகியோரும், தனாதிகாரிகளாக திருவாளர்கள் தோமஸ் அமரசூரியா, ஸி. பி மோடி, கே. எல் கங்குலி ஆகியோரும் 150 பேர் கொண்ட தேசியசபையினரும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

## இன்றைய பலன்

[4-3-68]

திங்கட்கிழமை
[மாசி மீ 21உ]

திதி- பஞ்சமி இரவு 7-46 மேல் ஷஷ்டி.
நட்சத்திரம்- பரணி
ராகுகாலம் 7-57 9-27
சுபநேரம் 12-27 — 1-57

இன்று பிறந்தவர்களுக்கு பொருள் வரவும் பொதுசன மதிப்பும் தாராளமாகக்கிடைக்கும் குடும்ப வழியில் சிறு பிணிக்கு இடமுண்டு. எனினும் கவலைப்படத் தேவையில்லை. சிலர் தனிக் குடித்தனத்தை நாடலாம். அரசியல் வாதிகளின் வாழ்வில் செல்வாக்குப் பெருகும் நாவன்மையுள்ளவர்கள் நலன்படவாழ்வர். எதிர்பாராத விருந்தாளிகளால் சில சந்தர்ப்பங்களில் பொருள் விரயமும் ஏற்படும். தெய்வ வழிபாடும் தெளிந்த சிந்தையும் இருப்பின் நல்ல முன்னேற்றமுண்டு.

மேஷம்- பிடிவாதம் வேண்டாம், பின்தங்க நேரிடும்.
ரிஷபம்- வாக்கில் மேம்பாடு, வசதிகள் பெருகும்.
மிதுனம்- கடினசிந்தை காத்திருக்கும் பகை.
கடகம்- தாய்வழிப் பெருமை, தரமான வாழ்வு.
சிம்மம்- அன்பும், பண்பும் இணைந்துவரும், ஆனந்தநிலை.
கன்னி- வேண்டாத கூட்டு, புத்தியைத் தீட்டு.
துலாம்- இணையவரும் துணை, எதிர்க்காமல் அணை.
விருச்சிகம்- தடை கண்டு தளர்ச்சி, தன முடக்கம்.
தனுசு- நாடியது கிடைக்கும், நல்லெண்ணம் வளரும்
மகரம்- பதவிச்சிறப்பு, மேலிடத்து ஆதரவு.
கும்பம்- தேடிவரும் செல்வம், நாடி வரும் கீர்த்தி.
மீனம்- தலைக்கனம் வேண்டாம். தள்ளிவிடும் கீழே.

—சோதிடக்கலாநிதி—
திருமலை வேலுப்பிள்ளை

## நாட்டிலும் நகரிலும்

அமெரிக்காவிலே — திடுக்கிடும், திக்குமுக்காடும் சம்பவங்களுக்கு பேர்போன அந்த அதிசய நாட்டிலே எதுவும் நடக்கும், என்னவும் நடக்கும்.

அதன் பிரதான நகராகிய நியூயோர்க்கில் வெஸ்ட் கொட் என்ற ஒருவர் ஒரு பெட்ரோல் நிலையத்தைக் கட்டிவிட்டு என்ன நினைத்தாரோ என்னவோ, திடீரென்று 1953-ம் ஆண்டு துறவியாகி எங்கேயோ மறைந்துவிட்டார்.

அந்த நிலையத்தின் வருமானத்தை அரசினர் வங்கியில் போட்டு வைத்துஇன்று வரை சுமார் ஒரு லட்சம் ரூபாய் சேர்ந்துவிட்டது. ஆனால் வெஸ்ட் கொட் போன இடம் தெரியவில்லை. கடைசியில் அவரை ஒரு மலையடிவாரத்தில் கண்டு பிடித்தார்கள். பழைய பத்திரிகைகளை படுக்கையாக வைத்து ஆனந்த நித்திரையில் அமிழ்ந்திருந்தார். அவருடைய கால்சட்டைப் பையிலிருந்த 44 சதங்களை எடுத்துக் காட்டி 'இவை தாம் எனது சொத்துக்கள். என்னைத் துன்புறுத்தாதீர்கள். எனக்கு ஒரு லட்சமும் வேண்டாம், ஒன்பது லட்சமும் வேண்டாம். இவ்வளவு பணத்தை வைத்துக்கொண்டு என்ன செய்வதென்று மூளையைக் குழப்பாமல் இந்தச் சில்லறையோடு காலம் கழிப்பது மேலானது' என்று கூறி வந்தவர்களை திருப்பியனுப்பிவிட்டு மீண்டும் பழைய பத்திரிகைகள் மீது தலையைச் சாய்த்துக் கொண்டார்.

ஃ ஃ ஃ

வெஸ்ட் கோட்டைப் போல வலிய வந்த பணத்தை துச்சமாக எண்ணி எட்டித் தள்ளுபவர்கள் போராட்டம் நிறைந்த இந்த நிலவுலகத்தில் எத்தனை பேருண்டு? பிறருடைய பணத்தையும் பொருள்களையும் சுரண்டிப் பிழைப்பவர்கள்தான் பெரும்பாலானவர்கள். இதற்கு விதிவிலக்கான ஒரு சிறுபான்மையும் உண்டு.

ஃ ஃ

சில நாட்களுக்கு முன்பு யாழ்ப்பாணத்தில்ஒரு குடும்பத்திலுள்ள ஏழு கூப்பன்களையும் எடுத்துக்கொண்டு சங்கக் கடைக்குச் சென்ற ஒரு சிறுவன் வழியில் கூப்பன்களை எங்கேயோ தவறவிட்டுவிட்டான். தெல்லிப்பளையிலிருந்து மரக்கறிக் கடகம் சுமந்து யாழ்ப்பாணம் சின்னக்கடைச் சந்தைக்கு வியாபாரம் செய்ய வரும் மூதாட்டி ஒருத்தி கூப்பன்கள் அடங்கிய காகிதப் பையை தெருவில் கண்டெடுத்து, அதைக் கடகத்துக்குள் போட்டுக்கொண்டு வீட்டுக்குச் சென்று பார்த்த போது கூப்பன்கள் இருப்பதைக்கண்டு, எழுத்துவாசனையில்லாத அவள் அவற்றை தனது பேத்தியிடம் காட்டி வாசிக்கச் சொன்னாள்.

கூப்பன்களில் யாழ்ப்பாணம் பிரதான வீதியில் வசிக்கும் ஒருவரின் பெயரும் விலாசமும் காணப்பட்டன.

அந்தக் கிழவி கூப்பனிலுள்ள விலாசத்தைத் தேடி தன் வியாபாரத்தையும் மறந்து, இரண்டு நாட்கள் அலைந்தாள். கடைசியில் எப்படியோ உரியவருடைய சரியான விலாசத்தைக் கண்டு பிடித்து அவரிடம் கூப்பன்களைச் சமர்ப்பித்தாள் அவருக்கு ஆனந்தம் தாங்கவில்லை.

அவளுக்கு ஏதாவது சன்மானம் கொடுக்கவேண்டும் என்ற நினைவுடன் மடியைத் தடவினார். ஆக ஒன்றரை ரூபாய் இருந்தது! தமக்கு மாதக் கணக்குவிள ஒரு பல

(5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உருளை கிழங்கு உற்பத்தியாளருக்கு நிபுணரின் யோசனை

சங்கானை, ஞாயிறு

தற்பொழுது கிழங்கு உற்பத்தியில் ஈடுபட்டிருக்கும் வடபகுதி விவசாயிகளில் சிலர் விரைவில் லாபமடையவிரும்பினால் நஷ்டத்தையே அடையவேண்டி நேரிடும் என இங்கு விஜயம் செய்த உருளைக்கிழங்கு உற்பத்தி நிபுணர் டாக்டர் சீசர் தெரிவித்துள்ளார்.

தற்பொழுது கிழங்கு உற்பத்தியில் ஈடுபட்டுள்ளவர்கள் கூடிய சீக்கிரம் லாபத்தைப் பெறுவதற்கு நன்கு விளைவுறு நிலையில் 90 நாட்களுக்கு முன்னதாக அறுவடை செய்வதால் சந்தைகளுக்கும் கடைகளுக்கும் விற்பனைக்கு வரும் கிழங்குகள் பழுதடைந்த நிலையில் இருப்பதைக் காணக்கூடியதாக இருப்பதாகவும் இதன் விளைவுகாலம் 90 நாட்கள் என்பதை அலட்சியப்படுத்துபவர்கள் 10 அந்தர் கிழங்கைக் கிண்டி எடுப்பாரானால் அது ஒரு சில தினங்களில் 4 அந்தர் நிறையை அடைந்துவிடுமென்றும் சில தினங்களில் இந்த நிறை 3 அந்தராகக் குறைந்துவிடும் என்றும் டாக்டர் சீசர் மேலும் தெரிவித்துள்ளார்.

தோல் தடிப்பேறி பூர்த்தியான விளைவைப் பெருத கிழங்கு சுவை குறைந்து சீக்கிரத்தில் பழுதடைந்துவிடும் என்றும் அவர் எடுத்துக் கூறினர்.

## முல்லைத்தீவுச் செய்திகள்

—நமது முல்லைத்தீவு நிருபர்—

### நல்ல நெல்விளைச்சல்

முல்லைத்தீவுப் பகுதியில் கடந்த வருடங்களிலும் பார்க்க நூற்றுக்குத் தொண்ணூறு வீதம் அதிக நெல் விளைந்தும் இதுவரை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் கடன் எடுத்து அதற்காக நெல்லைக்கொடுப்போம் என உத்தரவாதமளித்த ஒருவரும் சங்கங்கட்கு நெல் ஒருகொத்தேனும் கொடுக்காது தனிப்பட்ட வியாபாரிகட்கு கூடிய விலைக்கு விற்றுவருகிறார்களாம்.

ஃ ஃ ஃ

### இடமாற்றம்

முல்லைத்தீவு பிஸ்கால்மார்சலாகக் கடமையாற்றிய திரு. ஆர். ஜெ. இராசநாயகம் இம்மாதம் முதல் பதுளைச் சுகாதார அத்தியட்சகர் கந்தோருக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இவரின் இடத்துக்கு மன்னாரிலிருந்து திரு. குணநாயகம் வந்துள்ளார்.

ஃ ஃ

### வரட்சி

முல்லைத்தீவுப் பகுதியில் நீண்டகாலமாக மழை இல்லாதபடியால் வரட்சி அதிகரித்துள்ளது. இதனால் இப்பகுதியில் தொற்று நோய்கள் அதிகரித்துள்ளன. கிணறுகள் யாவும் வற்றிக்கொண்டுபோகின்றன. பயிர்கொடிகள் யாவும் தண்ணீரின்றி வாடுகின்றன.

ஃ ஃ

### கசிப்பு தயாரித்தாராம்

முல்லைத்தீவு கள்ளப்பாடு என்னுமிடத்தில் கசிப்பு தயாரிப்பதாகக் கிடைத்த தகவலைத் தொடர்ந்து முல்லைத்தீவுச் சலால் பரிசோதகர் திரு. வே. பி. இசநாயகா தலைமையில் சென்ற சலால் கோஷ்டியினர் எஸ். சி. பெர்ணண்டோ என்பவரைக் கைது செய்து கசிப்புத் தயாரிக்க உதவிய உபகரணங்களையும் கைப்பற்றினர். பிணையில் விடப்பட்ட பெர்ணண்டோவை இம்மாதம் 14-ம் திகதி முல்லைத்தீவு நீதிமன்றத்தில் ஆஜராகும்படி எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளார்.

## தொழிற்சங்க கட்டடம் சேதம்

திருக்கோணமலை, ஞாயிறு

இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்தின் திருக்கோணமலைக் கிளைகளின் காரியாலயம் நேற்று அதிகாலை சேதத்திற்குள்ளாகியது. இச்சேதம் டைனமட் வெடி மூலம் ஏற்படுத்தப்பட்டிருக்கலாமென நம்பப்படுகிறது. காரியாலய யன்னல் கண்ணாடிகள் யாவும் சுக்குநூருகின. கட்டடத்துக்கு பலத்த சேதம் ஏற்பட்டிருந்தபோதிலும் சம்பவம் நடைபெற்ற போது யாரும் உள்ளிருக்காததினால் உயிராபத்துக்கள் எதுவும் ஏற்படவில்லை பொலிசார் புலன் விசாரணை செய்து வருகின்றனர்.

## விஞ்ஞான கருத்தரங்கு

கொழும்பு, ஞாயிறு

அமெரிக்கத் தகவல் நிலையத்திற்குச் சொந்தமான லிங்கன்மண்டபத்தில் மார்ச் மாதம் 8-ம் திகதி மாலை 5-30 மணிக்கு விஞ்ஞானக் கருத்தரங்கு ஒன்று நடைபெறுகிறது. "மனித வர்க்கத்துக்கு உதவி புரியும் விஞ்ஞானம்" என்ற அடிப்படையில் பல அறிஞர்கள் இக் கருத்தரங்கில் கருத்துரை வழங்க விருக்கின்றனர்.

இலங்கை விஞ்ஞானகைத் தொழில் ஆராய்ச்சி நிறுவனத்தைச் சேர்ந்த டாக்டர் ஜோர்ஜ் பொனம்பெருமா பிரதம அதிதியாகக் கலந்து கொள்ளுகிறார், கன்னொருவாவிலிருக்கும் மத்திய விவசாய ஆராய்ச்சி நிறுவனத்தில் அரிசி ஆராய்ச்சியாளராகப் பணிபுரியும் டாக்டர் ஜேம்ஸ் மூவா, இலங்கைப் பல்கலைக் கழகத்தி இரசாயனவியல் விரிவுரையாளராகவிருக்கும் டாக்டர் பி. பி. ஜி. எல். சிறிவர்த்தனு, வித்தியோதயா பல்கலைக் கழகத்தைச் சேர்ந்தவரும் புல்பிரைட் பேராசிரியருமான சங்கைக்குரிய பிதா சக்காரி எம். ஓ. பிரில், வித்யோதயா பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் ஏ. சி ஜே. வீரக்கோன் ஆகியோரும் இக்கருத்தரங்கில் பங்கெடுத்துக் கொள்ளுகின்றனர்.

## வருடாந்த மஹோற்சவம்

யாழ்ப்பாணம், திங்கள்

புங்குடுதீவு கிராஞ்சியம்பதி ஸ்ரீ மீனாட்சி அம்பாள் சமேத சோமசுந்தரேஸ்வரப் பெருமான் வருடாந்த மஹோற்சவம் இம்மாதம் 6-ம் திகதி ஆரம்பமாகவிருக்கின்றது. அடுத்த மாதம் 14-ந் திகதி புதிதாக அமைக்கப்பட்ட ரத உற்சவமும், 15-ம் திகதி தீர்த்தோற்சவமும், 16-ம் திகதி இரா திருக்கல்யாணமும் நடைபெறும். (கா. நி)

## ஆலய உற்சவம்

புன்னாலைக்கட்டுவன், திங்.

ஊரெழு விநாயகர் ஆலயம் சனிக்கிழமை கொடியேறியது.

இதைத் தொடர்ந்து நடைபெறும் திருவிழா உற்சவங்களில் விசேஷ பூசைகளும், இலங்கை, இந்தியக் கலைஞரின் சிறப்பு ...ச்சிகளும் நடைபெறவிருக்கின்றன.

## 'பயனுள்ள கல்வி அவசியம்'

உடுவில், ஞாயிறு

பாடசாலைகளில் படிக்கும் மாணவர்கள் தாங்கள் கற்கும் பாடங்களை ஆதாரமாக வைத்து தமது வாழ்க்கைக்கு வேண்டிய வேலைவாய்ப்பைப் பெறமுடியுமா என்பதை சிறிது சிந்தித்துப் பார்க்கவேண்டும். இலக்கியத்தையும் சரித்திரத்தையும் படிக்க முனையும் மாணவன் ஒருவனுக்கு அக்கல்வியால் வாழ வழி பிறக்குமா? பயனுள்ள கல்விதான் இன்றைய நிலையில் அவசியமானது."

யாழ்ப்பாணத்திலுள்ள கனிஷ்ட தொழில் நுட்ப நிலையத்தில் வர்த்தகப் பயிற்சிபெற்று, தமிழ் அரசாங்கத்தட்டெழுத்தாளராக பதவிபெற்றுச் செல்லும் செல்வன் சி. பவானந்தன், செல்வி என். சடாட்சர நாயகி (சந்திரா) ஆகியோருக்கு அளிக்கப்பட்ட பிரிவுபசார வைபவத்தில்பேசிய மேற்படி நிலையத்தின் சுருக்கெழுத்துப் போதனாசிரியர் திரு. சி. இராமலிங்கம் இவ்வாறு கூறினர்.

திரு. சி. இராமலிங்கம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:—

விஞ்ஞான, தொழில் நுட்பக்கலைகளினால்தான் நமக்கு விமோசனம் ஏற்படும். எமது நிலையத்தில் தொழில்—வர்த்தக பயிற்சிபெற்ற எந்த ஒரு மாணவராவது இதுவரையில் வேலையின்றி அலையவில்லை. பட்டதாரிகள் கூட இன்று தொழில் நுட்ப பயிற்சிபெற விரும்புகிறார்கள். காரணம் தொழில் நுட்ப பயிற்சிபெற்ற மாணவர்களுக்கு வேலைவாய்ப்புகள் அதிகமுண்டு.

தமிழ்மொழிப்சபாதனசிரியர் திரு. அ. சுந்தரம்பிள்ளை செல்வன் நந்தலாகிநேரு, செல்வன் கே. சிவராசா உட்படவேறுபலர்பாராட்டுரை வழங்கினர்.

## சம்பளமும் வேலையும்

### தொழில் நீதிமன்றம் தீர்ப்பு

யாழ்ப்பாணம், திங்.

வேலைநீக்கம் செய்யப்பட்ட "ஸ்டோர் கீப்பரு"க்கு சம்பளமும் வேலையும் கொடுக்கும்படி தொழிலாளர் மனுவொன்றை விசாரித்த தொழில் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. தொழில் நீதிமன்றத்தலைவர் திரு. வி. சுப்பிரமணியம் முன்னிலையில்வேலைநீக்கம்செய்யப்பட்டவர் தாக்கல்செய்த மனு நேற்று விசாரணை செய்யப்பட்ட பின்னரே இத்தீர்ப்பு வழங்கப்பட்டது.

வட்டக்கச்சி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் "ஸ்டோர் கீப்பராகக்" கடமையாற்றிய வி. சங்கரப்பிள்ளை என்பவர் சங்க நிர்வாகத்தால் 1966-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ந் திகதி வேலைநீக்கச் செய்யப்பட்டிருந்தார், இதனை ஆட்சேபித்து சங்கரப்பிள்ளை வட்டக்கச்சி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க நிர்வாகத்துக்கெதிராக தொழில் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார்.

இம்மனுவை நேற்று பரிசீலனை செய்து விசாரணை செய்த நீதிமன்றம் வேலைநீக்கம் செய்யப்பட்ட சங்கரப்பிள்ளைக்கு மீண்டும் வேலை கொடுக்குமாறும், 1967-ம் ஆண்டு ஜனவரி மாதம் 1-ம் திகதியிலிருந்து வேலைநீக்கம் செய்யப்பட்டிருந்த காலம் வரைக்கும் சம்பளம் வழங்க வேண்டுமெனவும் தீர்ப்பளித்தது.

மனுதாரர் தரப்பில் தொழிற்துறை ஆலோசகரான திரு. எம். எல். ரி. துரைசிங்கம் ... பலநோக்குக் கூட்டுறவுச் சங்கச் சார்பில் அதன் மனேஜரான திரு. நடராசா சமூகம் கொடுத்திருந்தார். இத்தீர்ப்பை எதிர்த்து அப்பீல் செய்வதற்கு அடுத்த மாதம் 2-ந் திகதிவரைக்கும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு அவகாசமும் கொடுக்கப்பட்டுள்ளது. [க. நி]

கிரிக்கெட்

## யாழ். இந்து, மத்தியகல்லூரி கோஷ்டிகள் இன்றுமோதும்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி கிரிக்கெட்கோஷ்டிக்கும் யாழ். மத்திய கல்லூரி கிரிக்கேட்கோஷ்டிக்குமிடையிலான போட்டி இன்று மாலை யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகிறது.

இரு கல்லூரி கோஷ்டிகளிலும் விளையாடும் வீரர்கள் வருமாறு:-

**மத்திய கல்லூரி**

பாலேந்திரா [காப்டன்], புரட்சிதாசன், சாந்திகரன், ஜீவானந்தம், நரேந்திரா, சுந்தரலிங்கம், ஜெயக்குமார் சுகுமார்' தில்லையம்பலம், பரமசிவம், தயசிக்கம், ராஜசிங்கம், ஜெயக்குமார்.

**இந்துக் கல்லூரி**

தர்மரெத்தினம் [காப்டன்], கந்தசாமி, சின்னராசா, உதயலிங்கம், அமலகுகன், சிறீதரன், கந்தையா, நிருத்தானந்தன், சற்குணசீலன், விபுலானந்தன், நகுலேந்திரன, கெங்காதரன், ராஜ்குமார், சச்சிதானந்தன்.

## தமேரியாக் கோஷ்டி வெற்றி

புன்னாலைக்கட்டுவன் ஞா.

தெளிவத்தை புதுஸ்டோர் மைதானத்தில் நடைபெற்ற சரபந்காட்டப் போட்டியில் தமேரியாக்கோஷ்டி, பிறைற்ஸ்ரார் கோஷ்டியை 3 புள்ளிகளால் தோற்கடித்தது.

வெற்றி பெற்ற கோஷ்டி சார்பில் கப்டன் கணேஸ் ஆறுமுகம், தங்கவேலு ஆகியோரின் விளையாட்டு பாராட்டப்பட்டது.

திரு, கே. நல்லையா மத்தியஸ்தம் வகித்தார்.

## ரூபா 5000 பொருட்கள்

### பொலிசாரிடம் சிக்கின

யாழ்ப்பாணம், திங்கள்

வல்வெட்டித்துறைப் பொலிசார் சென்ற வெள்ளிக்கிழமை இரவு சுமார் 5000 ரூபா பெறுமதியான கள்ளக்கடத்தல்பொருட்கள் எனச் சந்தேகிக்கப்படும் பொருள்களைக் கைப்பற்றினர். சேலைகள் சாரங்கள் வேட்டிகள், மணிக்கூடுப் பட்டிகள் ஆகியனவே பொலிசாரல் கைப்பற்றப்பட்டவை.

இதுசம்பந்தமாக சதாசிவம் என்பவரை பொலிசார் கைதுசெய்து சுங்க இலாகாவினரிடம் ஒப்படைத்தனர், புலன்விசாரணை தொடர்ந்து நடைபெறுகின்றது. [கா. நி]

## நாட்டிலும் நகரிலும்

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

சரக்குக்கடையில் பத்து ரூபாய்க்கு போதுமான சாமான்களை வாங்கிக் கொண்டு போகுமாறு அந்த அம்மாளை வேண்டினர்.

அவள் அடியோடு மறுத்துவிட்டாள். 'இதெல்லாம் மனிதருக்கு மனிதர் செய்யும் பரஸ்பர உதவி, ஐயா' என்றாள்.

எத்தனையோ பாடுபட்டு வற்புறுத்தியும் அவள் எதையும் ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டாள்—அவளிடம் கைவசமிருந்த அந்த ஒன்றரை ரூபாயையும் கூட.

ஃ ஃ

பெயர் தெரியாத இந்த மூதாட்டிக்கும் அந்த அமெரிக்க வெஸ்ட் கோட்டுக்கும் ஏதாவது தொடர்பு இருக்கிறதா சிந்தித்துப் பாருங்கள்!

—வழிப்போக்கன்

## வடஇலங்கை பேக்கரி

### சொந்தக்காரர் கவலை

யாழ்ப்பாணம், திங்கள்

இதுகாலவரை பாடசாலைகளும் அரசாங்கமும் திருப்தியுறும் விதத்தில் மாணவரின் இலவச மதியப்போசனத்திற்குரிய தரமான பனிஸ்களைத் தயாரித்து அளித்து வந்த வடபகுதியிலுள்ள நூற்றிற்கு மேலான பேக்கறிகளை உதாசீனம் செய்து எதிர்காலத்தில் தனிப்பட்ட ஒரு ஸ்தாபனத்தால் தயாரிக்கப்படும் பிஸ்கிற் வகைகளை மாத்திரம் பாடசாலைகளுக்கு விநியோகிப்பதற்கு எத்தனிப்பதாக நாம் கேட்கும் வதந்தி மெய்யாயின் அது அச்சேவையில் இதுகாலவரை ஈடுபட்டுள்ள பேக்கரித் தொழிலாளருக்குச் செய்யப்படும் மாபெரும் துரோகமாகும்.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட வடஇலங்கை பேக்கரி உற்பத்தியாளர் சமாஜத்தின் தலைவராக தெரிவுசெய்யப்பட்ட திரு. நீ. யேமஸ்மேற்கண்டவாறு அபிப்பிராயம் தெரிவித்தார். அங்குரார்ப்பணக் கூட்டத்தில் தொடர்ந்து அவர் பேசுகையில் கூறியதாவது.

இன்றுவடஇலங்கையில்பல்வேறு பாகங்களிலும் சிறந்த குடிசைத் தொழிலாக இயங்கிவரும் பேக்கரித் தொழிலில் ஈடுபட்டு உழைத்து வரும் மூவாயிரத்துக்கு அதிகமான தொழிலாளரும் அவர் குடும்பத்தினரும் அரசாங்கம் செய்ய யோசிக்கும் இம்மாற்றத்தினால் பெரிதும் பாதிக்கப்படுவர். எனவே சம்பந்தப்பட்ட எல்லோருகளும் திருப்தியளிக்கும் வகையில் இயங்கிவந்த இச்சேவையைத் துண்டிக்காது தொடர்ந்து இயங்கிட வேண்டுமென்று கல்விப்பகுதியினரைக் கேட்டுக்கொள்கிறோம்.

இதுபற்றி முறைசெய்ய மாகாண அதிபரை பேட்டி காண்பதெனவும் தேவை நேரின் கல்விப் பிரதம பொறுப்பாளர் பிரதமமந்திரி கல்வி மந்திரி மூவரியோருக்கு இதுபற்றி மகஜர் சமர்ப்பித்து பேட்டி காண்பதெனவும் இக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது

பின்வருவோர் சமாஜ உத்தியோகத்தர்களாக தெரிவு செய்யப்பட்டனர்:

போஷகர்; வண. பிரதம குரு ஸ்ரீ நாகவிகாரை, யாழ்ப்பாணம். தலைவர்: நீ. யேம்ஸ் பி.ஏ. உபதலைவர்: திரு. எம். யேக்கப் ஜி. வோபததிருஞ. எஸ். கப்பிச்சை, இணைக் காரியதரிசிகள்: திரு கே. குமாரசாமி கே. எல். வில்லியம், இணைத் தனாதிகாரிகள்; திரு ஏ, எஸ். சிவலிங்கம், ஜீ. ச. சி. அவிஸ்அப்பு.

## வீதி சீர்கேடு

உடுப்பிட்டி, ஞாயிறு

கரணவாய்குஞ்சர் கடைச் சந்தியிலிருந்து கரணவாய் தெற்கு சோளங்கன் மகா வித்தியாலயத்திற்குச் செல்லும் பிரதான வீதி கடந்த பல வருடங்களாகப் பழுது பார்க்கப் படாமையினால் மிகவும் சீர்கேடான நிலையிலுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறந்தவரை எதிரிகள் சூழ்ந்து தாக்கினர்

## வசாவிளான் கொலை வழக்கு விசாரணையில் சாட்சியம்

குரும்பசிட்டி, ஞாயிறு

இறந்தவர் எனக்கு மச்சான் முறை. எதிரிகளும் எனக்கு தூரத்து முறையிலான உறவினர்கள். ஒருவருக்கொருவர் அண்மையில்தான் எதிரிகள் வசித்து வருகின்றனர். இறந்தவர் வீடும் எதிரிகள் வீட்டிற்கு அருகிலேயேதான் இருக்கின்றது. சம்பவ தினம் மாணிக்கன் என்பவருடன் இறந்தவரது வீட்டுக்கு சுமார் மாலை 2 மணியளவில் போனேன். போகும் வழியில் எதிரிகள் தோட்டத்தில் மிளகாய் பயிரிட கொட்டன் பொல்லுகளினால் நிலத்தை நிரவி வேலைசெய்து கொண்டிருப்பதை கண்டேன். எதிரிகள் இத் தோட்டக் காணியை குத்தகைக்கு எடுத்திருந்தனர். காணியின் சொந்தக்காரர் யாரெனத் தெரியாது. நாங்கள் தோட்டத்திற்கு அண்மையில்சென்று கொண்டிருக்கையில் முதலாம்எதிரி மாணிக்கனை நோக்கி "மச்சான் நில்! நான் வாறேன்" எனக் கூறிக்கொண்டு கையில் கொட்டன் பொல்லையும் கொண்டு ஓடிவந்தார்.

இறந்தவர் ஓடிவர "நீயும் வாறியோ" எனக்கூறியபடி 2ம் எதிரி இருதடவைகள் தலையில் கொட்டன் பொல்லினால் ஓங்கி அடித்தார். இதனால் இறந்தவர் நிலத்தில் வீழ்ந்துவிட்டார். நிலத்தில் விழுந்து கிடந்த இறந்தவர் மேல் பின்னர் 6ம் எதிரி பெரிய கல்லொன்றைத் தூக்கிப் போட்டார். பின்னர் எதிரிகள் இறந்தவரை குவியலாக சூழ்ந்து நின்று பொல்லுகளால் தாக்கினர். இப்படியாக தாக்குதல் இடம் பெறும் போது நாகன் தனதுவீட்டிலிருந்து அவ்விடம் வந்தார். எதிரிகளை நோக்கி "ஏன் அடிக்கிறீர்கள்" என நாகன்கேட்டவாறு கல்லால் எறிந்தார். அப்போது 2ம், 4ம, எதிரிகள் நாகனையும் அடித்தனர். அடித்து தாக்குதல் நடாத்திய பின் எதிரிகள் அவ்விடத்தை விட்டு ஓடிவிட்டனர். நான் கார் கொண்டுவந்து காயமடைந்த மூவரையும் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றேன். பின்னர் பொலிசாருக்கு வாக்கு மூலம் கொடுத்தேன்.

வசாவிளான் கொலை வழக்கு மல்லாகம் நீதிபதி திரு. எம் சண்முகலிங்கம் முன்னிலையில் தொடர்ந்து விசாரணை செய்யப்படுகையில் சாட்சியமளித்த சதாசிவம் மகாலிங்கம் வயது 23 என்பவர் மேற்கண்டவாறு கூறினார்.

சாட்சிமேலும் கூறியதாவது:— முதலாம்எதிரியைத் தொடர்ந்து மற்றைய எதிரிகளும் கொட்டன் பொல்லுகள் தாங்கியவாறுஎம்மை நோக்கி வந்தனர். இதைக் கண்டதும் திரும்பிநாங்கள் வந்த பக்கமாக ஓடினோம். அந்நேரம் வழியில் 6ம்எதிரி எம்மை நோக்கி முன்னால் வந்தார். அப்போது 6ம்எதிரி கல்லொன்றைஎடுத்துமாணிக்கனுக்கு எறிந்தார். இதனால் தலையில் காயம்ஏற்பட மாணிக்கன் கைகளால்காயத்தை பொத்தியவாறுநிற்க முதல் எதிரிவந்து அவருக்கு தலையில் பின்பக்கமாக அடித்து தாக்கினார். இந்நேரம் நான் எழுப்பிய கூளறல் சத்தம் கேட்டு இறந்தவர் அவ்விடம் ஓடிவந்தார்.

காங்கேசன்துறை மாவட்ட உதவிவைத்திய அதிகாரி டாக்டர் என். சிவசுப்பிரமணியமும் சாட்சியமளித்ததையடுத்துமேல் விசாரணையை நீதிபதிபின்போட்டுள்ளார்.

காங்கேசன் துறைப்பொலிசார் வசாவிளான் குட்டிப்புலம் வாசியான கணபதி சடையன் என்பவரை இவ்வருடம் தைமாதம் 26ந் திகதி கொலை செய்ததாக ஒரு பெண்மணி உட்பட அதேயிடத்தைச் சேர்ந்த பி.பொன்னன், கே.துரையன், ஈ. பொன்னன், பி.இரத்தினம், எஸ்.வள்ளி ஆகியவர்கள் மேல் இவ் வழக்கைத் தொடர்ந்துள்ளனர்.

எதிரிகள் சார்பில் வழக்கறிஞர் ஆர்.ஜே. செல்வரத்தினத்தின் அனுசரணையுடன் அட்வக்கேட் சிவசுப்பிரமணியம் ஆஜரானார். காங்கேசன்துறை பொலிஸ் இன்ஸ்பெக்டர் வீ. செல்லையா உதவியுடன் திரு. எஸ். நடராசா வழக்கை நடாத்தினார்.

# "வேலைநீக்கம் இல்லை"

## முகாமையாளர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஞாயிறு

"சென்.ஜோன்ஸ் கல்லூரியின் மூன்று ஆசிரியர்கள் வேலைநீக்கம் செய்யப்பட்டதாக பிரசாரம் செய்யப்படுவது முற்றிலும் உண்மைக்கு மாறானதாகும். இவர்களுக்கு கட்டாய லீவு வழங்கப்பட்டுள்ளது. கல்லூரியில் ஆசிரியர்களைச் சேர்த்து வேலை நிறுத்தத்தை இவர்கள் மேற்கொண்டதாலேயே இவர்களுக்கு கல்லூரி அதிகார சபையின் கட்டளைக்கிணங்க கட்டாய லீவு வழங்கப்பட்டது. எனினும் இவர்களுக்குச் சம்பளம வழங்கப்பட்டு வருகின்றது".

இவ்வாறு யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரியின் முகாமையாளர் தெரிவிக்கிறார்.

அவர் மேலும் கூறியதாவது:

இந்த ஆசிரியர்கள் விசாரணையின்றி வேலைநீக்கம் செய்யப்பட்டார்கள் என்பது தவறாகும். இவர்கள் கல்லூரியில் நடந்து கொண்ட முறை தவறானதால் ஏன் "சிட்சா நடவடிக்கை" எடுக்கக்கூடாதென இவர்களிடம் கேட்டோம். இவர்கள் குற்றச்சாட்டுக்கள் யாவற்றையும் மறுத்தனர். அதிகார சபைக்கு மனுப்பண்ணினார்கள். அதிகாரசபை இரு இளைப்பாறிய நீதிபதிகளையும் ஒரு இளைப்பாறிய அதிபரையும் கொண்ட குழுவை நியமித்தது. நியாயவாதியின் உதவியின்றி குழுமுன் சாட்சியமளிக்க முடியாதென அவர்கள் மறுத்தனர். இதனால் பிற வாக்கு மூலங்களைச் சேகரித்தது. இரவிரவாக ஆசிரியர்கள் வீடுகளுக்கு இந்த ஆசிரியர்கள் சென்று வேலைநிறுத்தம் செய்யுமாறு தூண்டியதாக விசாரணைக் குழு அறிவித்தது.

3 ஆசிரியர்களும் ஒழுங்கீனமாக நடந்துகொண்டதால் இவர்களை வேலைநீக்கம் செய்ய கல்லூரி முகாமையாளர்கள் எண்ணினார்கள். சட்டப்படி கல்வி அதிகாரியின் உத்தரவின்றி வேலைநீக்கம் செய்யப்பட முடியாதாகையால் கல்வி அதிகாரிக்கு இது அறிவிக்கப்பட்டது.

பின்னர் கல்வி அதிகாரி முன்னிலையில் நடாத்த விருந்த விசாரணையையும் இவர்கள் சிலகாரணங்களைக் காட்டி மறுத்துவிட்டனர். இவர்களது ஒழுங்கீனத்தைப் பொறுத்தே இவர்கள் பாடசாலைவளவுக்குள் அனுமதிக்கப்படாது தடுக்கப்பட்டனர். எனினும் இவர்களுக்கு முழுச்சம்பளமும் வழங்கப்படுகின்றது. இவர்களை வேலைநீக்கம் செய்யுமாறு கல்வி அதிகாரிக்குச் சிபார்சு செய்துள்ளோம்.

கல்லூரி முகாமையாளர் நடந்துகொண்ட முறை பிழையானதென்று கல்வி இலாகா அறிவிக்கவில்லை. இவர்களைத் திருப்பி ஆசிரியர்களாக நியமிக்குமாறும் கல்வி இலாகா அறிவிக்கவில்லை. விசாரணையின் பின்னரே கல்வி அதிகாரி தீர்ப்பை வழங்குவார். கல்வி அதிகாரி தீர்ப்பு வழங்கு முன்னர் சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் தாம் வேலைநீக்கம் செய்யப்பட்டு விட்டதாக பிரசாரம் செய்வது எவருக்கும் நன்மை அளிப்பதாக இருக்காது.

(கா. நி.)

# 'டின்பால்கள்' வெளி வந்தன

யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம், திங்கள்

"யாழ்ப்பாணத்திலுள்ள வர்த்தக ஸ்தாபனங்களில் போதிய டின்பால் உபஉணவுப் பொருட்கள் இருக்கின்றன"

இவ்வாறு வடபகுதி உயர்தர பொலிஸ் அதிகாரி ஒருவர் நமது நிருபரிடம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் தலைமைக் காரியாலய பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. மாணிக்கம் தலைமையில் சென்ற பொலிசார் இங்குள்ள பலசரக்குக் கடைகள் பலதையும் நேற்று முன்தினம் திடீர் சோதனை செய்தார்கள். இச்சோதனையின் போது பல கடைகளிலும் நூற்றுக் கணக்கான டின்பால்கள் இருந்தது கண்டு பிடிக்கப்பட்டது.

(கா. நி.)

# கிராமசபை எல்லைகளை பர்வையிட்டார்

சுழிபுரம், திங்கள்

வடபகுதி உள்ளூராட்சி ஆணையாளர் திரு. சு. முருகவேள், சித்தங்கேணிக் கிராம எல்லைகளைப் பார்வையிட்டார். சுழிபுரம்' வட்டுச்சேராட்டை ஆகிய இரு கிராம சபைகளுக்கும் சொந்தமானவுள்ள இக்கிராம எல்லைகள் பல் வகையான சிக்கல்கள் நிருறைந்ததாக இருந்து வருகின்றன.

நீண்ட நாள் பிரச்சனையை சுலபமாகத் தீர்க்கவும் ஓர் புதிய எல்லையை நிர்ணயிக்கும் நோக்குடன், இரு கிராமசபைப் பகுதியினருடன் நேரடியாக சித்தங்கேணிக் கிராமத்தை தமது சக உத்தியோகஸ்தர்களுடன் ஆணையாளர் பார்வையிட்டார்.

# யாழ். ஆஸ்பத்திரியில் பாஸ்முறை வந்ததற்கு காரணம்

யாழ்ப்பாணம், திங்கள்

"யாழ்ப்பாணம் அரசினர் ஆஸ்பத்திரியில் நோயாளிகளினதும், ஆஸ்பத்திரி ஊழியர்களினதும் நலன் கருதியே சில வார்ட்டுக்களில் பாஸ் முறை புகுத்தப்பட்டுள்ளது. இந்த பாஸ்முறை இலங்கையில் இங்கு மாத்திரம் நடைமுறையிலிருந்து வருகின்றது. இந்த பாஸ் முறை இங்கு நிலவிய அசௌகரியத்தைப் பெருமளவில் போக்கியுள்ளது"

இவ்வாறு யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி நிர்வாக சபை உறுப்பினர்களில் ஒருவர் நமது நிருபரிடம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் முதலாம், இரண்டாம், ஆறும், பத்தாம், பதினான்காம் வார்ட்டுகளில் நோயாளர்களைப் பார்ப்பதற்கு நண்பகல் 12 மணியிலிருந்து 1 மணிவரையும், மாலை 5 மணியிலிருந்து 6 மணிவரையும் பாஸ் முறையே அனுசரிக்கப்பட்டு வருகின்றது. இந்த பாஸ் முறையில் ஒருதடவையில் இருவர் மாத்திரம் ஒரு நோயாளியைப் பார்க்க முடியும்.

இதுபற்றி ஆஸ்பத்திரி நிர்வாக சபை உறுப்பினர் மேலும் தெரிவித்ததாவது:

ஆஸ்பத்திரி பிரசவ வார்டுகளில் பிறந்த குழந்தைகளுக்கும் நோயாளிகளுக்கும், மற்றைய வார்ட்டுகளின் சத்திர சிகிச்சைநோயாளிகளுக்கும், அதிகமான ஜனநெருக்கடி தொற்று நோய்கள் பரவ ஏதுவாய் அமைகின்றது.

இது மாத்திரமன்றி மற்றைய வார்ட்டுகளிலும் நோயாளிகளை பார்க்கும் நேரங்களில் கூட்டங் கூட்டமாக பார்வையாளர்கள் நிற்பதால் அது நோயாளிகளுக்கு தொல்லையாக விருப்பதாலும், ஆஸ்பத்திரி ஊழியர்கள் தங்கள் கடமைகளை இந்தநேரத்தில்நிறைவேற்ற முடியாதிருப்பதாலுமே இந்த பாஸ்மிறை இங்கு நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. இந்தக் கட்டுப்பாடு சில பார்வையாளர்களுக்கு வசதியீனத்தை உண்டு பண்ணினாலும் நோயாளிகளின் நலனை முன்னிட்டே இங்கு அமுலாக்கப்பட்டது.

[கா. நி:]

# இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம்

## திங்கள் 4-3-68

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

**344 மீற்றர் & 61 மீற்றர்**

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 கிறிஸ்தவநற்சிந்தனை, 6-45 பக்திப்பாடல்கள், 7-20 தினக்குறிப்பு, 7-30 குரல்வளை, 8-00 இசைவேளை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

**344 மீற்றர் & 49 மீற்றர்**

பகல் 12-00 சித்திரகானம், 1-00 மாதர்கேட்டவை.

**344 மீற்றர் & 61 மீற்றர்**

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 கதம்பஇசை.

இரவு 6-15 குதூகலம், 6-45 பாவளம், 7-00 கிராம சஞ்சிகை, 7-30 பேச்சு — டாக்டர் டி. பீரிஸ் — "சிங்கள இலக்கியம்", 7-45 வாத்தியஇசை, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 இசைச் சித்திரம், 10-00 நேயர் விருப்பம்.

# காங்கேசன்துறை சிமெந்து தொழிலாளர் அமைச்சருக்கு மகஜர்

அளவெட்டி, ஞாயிறு

காங்கேசன்துறைசிமந்துத் தொழிற்சாலையில் வேலை செய்யும் தொழிலாளருக்கு வீடுகட்டுவதற்கும் காணி வாங்குவதற்கும் தமது காணிகளை ஈடுமீட்பதற்கும் குறைந்தது 3000 ரூபாய் அல்லது மூன்று வருட முழுச் சம்பளம் கடனாக வழங்குமாறு காங்கேசன்துறை சிமந்து உற்பத்தித் தொழிலாளர் சங்கம் தொழில் அமைச்சர் ஜனாப் எம். எச். முகமதுவுக்கு அனுப்பிய மகஜரில் கேட்டுக்கொண்டுள்ளது.

மேலும் அம்மகஜரில்தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இவ்வருடம் சிமந்துத் தொழிற்சாலை வழங்க இருக்கும் இலாபப் பங்கீட்டுப் பணத்தை (போனஸ்) ஒரு மாத முழுச்சம்பளத்துடன் சேர்த்து வழங்குவதோடு நாணய மதிப்பிட்டால் வாழ்க்கைச்செலவுக்காகஏற்றப்பட்ட 35 ரூபாவையும் போனஸுடனும், முழுச் சம்பளத்துடனும் சேர்த்து வழங்குக.

சைக்கிளின் விலை ஏற்றப்பட்டுள்ளதால் தொழிலாளர் பாவிப்புக்கு சைக்கிள் வாங்குவதற்கு தற்சமயம் கடனாக வழங்கும் 250 ரூபாவை 300 ரூபாவாக கூட்டிவழங்குக.

தொழிற்சாலையில் கடமையாற்றும் வேளையில் அகால மரணம் அடையும் தொழிலாளரின் குடும்பத்துக்கு தற்சமயம் வழங்கப்பட்டு வரும் ஒரு மாதச் சம்பளத்தை ஒரு வருடச் சம்பளமாக வழங்கவும்.

வேறு சில விஷயங்களும் இம்மகஜரில் எடுத்துக்கூறப்பட்டுள்ளன.

— —

# இரு வருடங்களாகியும் நியமனம் இல்லை

முல்லைத்தீவு, ஞாயிறு

முல்லைத்தீவில் இருந்த மிருகவைத்தியர் இறந்து இரு வருடங்களாகியும் இதுவரை அவரின் இடத்துக்கு ஒருவரையும் நியமிக்கவில்லை. இதனால் இரு காரியாதிகாரி பிரிவுகளில் உள்ள மக்கள் தங்கள் கால்நடைகட்கு உடனுக்குடன் சிகிச்சை பெற முடியாதநிலையில் உள்ளனர். மிருகவைத்தியர் கந்தோர் இருந்தும் உபயோகமற்றுஇருப்பது மக்களுக்கு கவலையளிக்கின்றது.

# இன்று தாக்கல்

யாழ்ப்பாணம், திங்.

பூநகரி, பல்லவராயன் கட்டு கிராமசபைகளின் புதிய தேர்தலுக்கான அபேட்சகர் நியமனப் பத்திரங்கள் இன்று தாக்கல் செய்யப்படவுள்ளன. [கா. நி

# சன்மார்க்க இளைஞர் மன்ற உறுப்பினர்

குரும்பசிட்டி, ஞாயிறு

குரும்பசிட்டி சன்மார்க்க இளைஞர்மன்றத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் வளர்மதி சனசமூக நிலைய மண்டபத்தில் திரு. கே. வீ. மகாதேவன் தலைமையில் நடைபெற்றபோது பின்வருவோர் நடப்பு வருட உத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு.கோ. கணேசநாதன், உபதலைவர்: திரு. சிவசுந்தரமூர்த்தி, இணைச் செயலாளர்கள்: திருவாளர்கள் செ. விக்னேஸ்வரன். து. தில்லைநடேசன், தனாதிகாரி: திரு. ஐ. ஜெகதீஸ்வரன், பத்திராதிபர்கள்: திருவாளர்கள் க. சிவதாசன், ஆ. சக்திதாசன்.

நான்குபேர்கொண்ட நிர்வாகசபையும் தெரிவுசெய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "பாடசாலைகளில் வர்த்தகக் கல்வி போதிக்க வசதி செய்க"

### வடமராட்சி வர்த்தக மாணவர் கோரிக்கை

உடுப்பிட்டி, ஞாயிறு 'வடமராட்சியில் பல கல்லூரிகள் இருந்தும் . இதுவரைகாலமும் வர்த்தகவியல் பாடங்கள் போதிக்கப் படாததினால் வர்த்தகத் துறையில் ஆர்வம் கொண்ட மாணவர்கள் பயன்பெறமுடியாது கஷ்டமடைந்து வருகின்றனர். ஒருசில பாடசாலைகளில் வர்த்தகவியல் பாடங்கள் போதிக்கப்பட்டு வந்த பொழுதிலும் இவ்வருடம் முதல் இவ்வகுப்புகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இதனால் வர்த்தகவியல் மாணவர்கள் தனியார் துறைப் பாடசாலைகளை நாடவேண்டியும் அதிக பணம் செலவழிக்க வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது. இன்று சுயபாஷைகளில் வர்த்தகக்கல்வி போதிக்கக் கூடிய சந்தர்ப்பம் இருந்தும் இக்கல்வி கல்லூரிகளில் போதிக்கப்படாதது மாணவர்கள் மத்தியில் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

இது சம்பந்தமாக நடவடிக்கை எடுத்து நாடு பூராகவும் உள்ள பாடசாலைகளில் வர்த்தகக்கல்வி போதிப்பதற்கு ஏற்ற ஒழுங்குகள் செய்க.'

இவ்வாறு கோரும் மகஜரொன்றை வடமராட்சி வர்த்தக மாணவ சங்கத்தினர் கல்வி அமைச்சருக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

இலங்கையில் வர்த்தகத் துறையில் போதிய தராதரம் பெற்றவர்களுக்கு அரசாங்க ஸ்தாபனங்களில் வேலைவாய்ப்பளிக்க வேண்டுமென்றும் அம் மகஜரில் கூறப்பட்டுள்ளது.

---

நெல்லியடி மகாவித்யாலய

## பேச்சு கட்டுரை போட்டி முடிவுகள்

உடுப்பிட்டி, ஞாயிறு நெல்லியடி மகாவித்தியாலய இல்லங்களுக்கிடையே தமிழ், ஆங்கிலப் பேச்சுப் போட்டி, கட்டுரைப்போட்டிகள் நடாத்தப்பட்டன. இப்போட்டிகளில் பாரதி, இளங்கோ, வள்ளுவன், கம்பன் ஆகிய நான்கு இல்லங்கள் போட்டியிட்டன. போட்டி முடிவுகள் விபரம் வருமாறு:—

ஆங்கிலப்பேச்சு: பெண்கள் [கீழ்ப்பிரிவு] கே. வசந்தி, வி. தயாநிதி, எஸ். சந்திரசோதி, [மத்திய பிரிவு] ரீ? கனகாம்பிகை, கே. மத்மாசனி, எஸ். நாகமலர், [மேற்பிரிவு] பீ. ஜெயக்குமாரி, வி. அஞ்சனதேவி, ரீ. நகுலாம்பிகை, ஆண்கள் [கீழ்ப்பிரிவு] பீ. பாலராஜன், கே. விக்கினேஸ்வரலிங்கம், என். தெய்வேந்திரராசா: [மத்தியபிரிவு] ரீ. கலாமணி, பீ.ரஞ்சன், வி. சுந்தரராஜன். [மேற்பிரிவு] எஸ். சிவசுப்பிரமணியம், ரீ. சித்திவிநாயகலிங்கம், பீ. மீனாட்சிசுந்தரம்பிள்ளை, [அதிமேற்பிரிவு[ எஸ். குணகரன், வீ. சுப்பிரமணியம், கே. சிறீபஞ்சாட்சரம்.

தமிழ்ப்பேச்சு:- பெண்கள் [கீழ்ப்பிரிவு] வீ.ஜெயராணி, எஸ். சந்திரசோதி, கமலாம்பிகை. [மத்திய பிரிவு] புவனேஸ்வரி, வி. இளஞ்செல்வி எஸ். புவனமலர். [அதிமேற்பிரிவு] கே. புவனேஸ்வரி, ஆண்கள் [கீழ்ப்பிரிவு] எம். நவயுவன், சத்தியபாஸ்கரன், எம். குணாளன். [மத்திய பிரிவு] என். அசோகன், எம். அருட்செல்வம், ஆர். சிவரத்தினம். [மேற்பிரிவு] ஏ. எம். ஜெயரத்தினம், கே. குலசேகரம், கே. சிவானந்தன். [அதி மேற்பிரிவு] எஸ். அமிர்தலிங்கம், கே. வசந்தராஜா. இ. இருதயதாஸ்.

தமிழ்க்கட்டுரை:- [ஆண்கள்] சைவப்புலவர் எஸ். திரவியம், பி. எம். அப்துல் முனாஃப், வி. சிவதாசன், [பெண்கள்] எஸ். நாகேஸ்வரி, எஸ். யோகராணி, எம். தவமலர்.

ஆங்கிலக்கட்டுரை:- ஆண்கள்) எஸ். நடராஜா, எஸ். அருள்முகவரதன், எஸ். புவிமன்னசிங்கம். (பெண்கள்) வி. அஞ்சலிதேவி, பி. ஜெயகுமாரி, எஸ். பவானி.

---

## விளையாட்டு மைதானம்

அளவெட்டி, ஞாயிறு வீமன்காமம் மகாவித்தியாலய மாணவர்களின் வசதிக்கேற்ப விளையாட்டு மைதானம் ஒன்று அமைக்கப்படவிருக்கிறது.

வல காலமாக மாணவர்கள் விளையாடுவதற்கு ஏற்ற விளையாட்டு மைதானம் இல்லாது கஷ்டமடைந்ததைத் தொடர்ந்து வித்தியாலயத்துக்குமுன் உள்ள காணியில் விளையாட்டு மைதானம் அமையவிருக்கிறது.

இம்மைதானம் உதைபந்தாட்டம் கிரிக்கெட், கூடை பந்தாட்டம்போன்ற விளையாட்டுக்கள் விளையாடத்தக்க வகையில் அமையவிருக்கிறது

---

## நாவலர் கழகம் வென்றது

சங்கானை, ஞாயிறு சுதுமலை நாவலர் விளையாட்டுக் கழகத்திற்கும் திருநெல்வேலி விளையாட்டுக் கழகத்திற்கும் இடையே நடைபெற்ற சிநேகபூர்வமான கரபந்தாட்டபோட்டியில் நாவலர் இரு ஆட்டங்களை எடுத்து வெற்றியீட்டியது.

இவ்வருடம் வலிமேற்குப் பிரிவில் நடைபெற்ற கரபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் கேடயத்தை தட்டிக் கொண்ட நாவலர் கழகம் சிநேகபூர்வமான போட்டிகளிலும் கலந்து முன்னணியில் விளங்கிவருவது குறிப்பிடத்தக்கது.

---

வடமராட்சி

## மாணவரிடையேயான போட்டிகள்

உடுப்பிட்டி, ஞாயிறு வடமராட்சிப் பாடசாலை மாணவ, மாணவியரிடையே வடமராட்சி ஆசிரியர் சங்கம் நடாத்தும் வருடாந்த தமிழ், ஆங்கிலப் பேச்சுப் போட்டி, இசைப்போட்டி, கட்டுரைப் போட்டி ஆகியன இவ்வாரம் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றன

---

## நெற்செய்கைப்போட்டி முடிவுகள் தாமதம்

நெடுந்தீவு, ஞாயிறு நெடுந்தீவில் நடாத்தப் பட்ட நெற்செய்கைப் போட்டியில் ஈடுபட்டிருந்தோரின் நெல்வயல்களை போட்டி மத்தியஸ்தர்கள் பார்வையிட்டுச்சென்று பலநாட்கள் ஆகியும் இதுவரை போட்டிமுடிவுகள் அறிவிக்கப்படவில்லையாம். போட்டியில் பங்குபற்றியவர்கள் போட்டிமுடிவுகளை அறிவதில் ஆவலாயுள்ளனர்.

---

## நாய் கடித்து சிறுமி மரணம்

அளவெட்டி, ஞாயிறு மாவிட்டபுரத்தைச் சேர்ந்த சிவராசாவின் மகள் ரசஜி [வயது 5] என்னும் சிறுமிக்கு நாய் கடித்ததால் ஏற்பட்ட ஏற்புவலியினால் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானார்.

---

## திருட முயன்றவர் கைது

புன்னாலைக்கட்டுவன், ஞாயிறு சுன்னாகச் சந்தையில ஒரு வியாபாரியிடமிருந்து சில பொருள்களைக் களவாட முனைந்தஒருவரையும்மெய்யுமாகப் பிடிபட்டுக்கப் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

---

# ஆலய பிரவேசவழக்கு வாபஸ் பெறப்படலாம்

## சமாதான தீர்வுக்கு முயற்சி

குரும்பசிட்டி, ஞாயிறு அச்சுவேலி உலவிற்குளப் பிள்ளையார் ஆலய முகாமையாளர் ஆர். குமாரவேலு கடந்தவருடம் ஆடிமாதம் 12-ம் திகதி அச்சுவேலியைச் சேர்ந்த கே. கணேசு என்பவரை ஆலயத்தின் உள்ளே சென்று தரிசிக்கவிடாது தடுத்ததாக காங்கேசன் துறைப் பொலிசாரால் தொடரப்பட்டிருந்தவழக்கு மல்லாகம் நீதிபதி திரு. எம். சண்முகலிங்கம் முன்லையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

விசாரணை ஆரம்பத்தில் எதிரி தரப்பு வழக்கறிஞர் சமூக குறைபாடுகள் சட்டத்தின்கீழ் தொடரப்பட்டுள்ள இவ் ஆலயப் பிரவேச வழக்கைப் பொலிசார் வாபஸ்பெற இருப்பதாகவும் இதற்கான உத்தரவை வடபகுதி பொலிஸ் சுப்பிரீண்டனற் திரு. ஆர். சுந்தரலிங்கம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலிடம் கேட்டு விண்ணப்பித்துள்ளார் எனவும் நீதிபதியிடம் தெரிவித்தார். ஆலய முகாமையாளர் பிரச்னையை சமாதானமாக சுமுகமாக தீர்க்கவேண்டிய நடவடிக்கைகளை எடுக்க முன்வந்துள்ளதாலேயே இவ் வழக்கை வாபஸ்பெற பொலிசார் இருக்கின்றனர், எனவும் இதனைப் பொலிஸ் தரப்பினரும் ஏற்றுக் கொள்ளச் சம்மதம் தெரிவித்துள்ளதாகவும் மேலும் கூறினார் இதற்கு பொலிஸ் தரப்பில் ஆஜரான வழக்கறிஞரும் ஒப்புதல் கொடுத்தார்.

இதன்பின்னர் நீதிபதி வழக்கு மேல் விசாரணையை மீண்டும் அடுத்தமாதப் 17-ந் திகதிக்கு ஒத்திவைத்தார்.

எதிரி சார்பில் வழக்கறிஞர் வி. தம்பிரத்தினம் ஆஜரானார். அட்வகேட் எம். ஆலாலசுந்தரம் பொலிசாருக்கு உதவியாக வழக்கை நடத்த ஆஜராகியிருந்தார்.

---

## இலட்சார்ச்சனை

சுழிபுரம், திங்கள் சுழிபுரம் பறுளை ஸ்ரீசுப்பிரமணிய சுவாமி கோவிலில் இலட்சார்ச்சனை வைபவத்தின் போது இன்று மாலை 6 மணிக்கு செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி 'தமிழ்த் தெய்வம்' என்னும் பொருள் பற்றி விரிவுரை நிகழ்த்துவார்.

---

## பல்கலைக்கழக மாணவரின் தெய்வ வழிபாடு

பேராதனை, ஞாயிறு பல்கலைக்கழகத்தில் இந்து மாணவர் சங்கத்தின் சார்பில் சிவராத்திரிவிழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது மாணவர்கள் பக்தியுணர்வோடு மேற்கொண்ட இச்சமய விழாவில் தங்கள் கலைத்திறமைகளையும் எடுத்துக்காட்டினர்.

பிரார்த்தனையைத் தொடர்ந்து சங்கத்தலைவர் திரு. கிருஷ்ணானந்தசிவத்தின் தொடக்கவுரையோடு விழா ஆரம்பித்தது. இவ் விழாவில் சிவராத்திரியின் சிறப்பைப்பற்றிகொழும்புப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த திரு. கோ. சுந்தரமூர்த்தி எடுத்து விளக்கினார். அவரது பேச்சைத் தொடர்ந்து பல்கலைக்கழக மாணவ மாணவிகளின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

விழாவைத் தொடர்ந்து பேராதனைக் குன்றின்மீது அமைக்கப்பட்டுவரும்குமரக் கடவுளின் கோவில் மைதானத்தில் அடுத்த நாள் மாணவர்களினால் அன்னதானம் வழங்கப்பட்டது.

---

## யாழ்ப்பாணத்துக்கு மீண்டும் பிக்குகோஷ்டி

யாழ்ப்பாணம், திங். யாழ்ப்பாணத்துக்கு மீண்டும் பிக்கு கோஷ்டியொன்று வரலாமெனத் தெரிகிறது.

இங்கு சில பகுதிகளில் மேலும் கலவரநிலை தோன்றுது சமாதான முயற்சிசெய்யும் நோக்கமாகவே இக் கோஷ்டி யாழ்ப்பாணத்தில் உள்ள நாகவிகாரையின் பிரதம குருவானகடவத்தை நந்தரசம நாயகதேரோ சமீபத்தில் கொழும்பு சென்று அங்குள்ள பௌத்த ஆகம தலைவர்களைச் சந்தித்து நிலைமைகளை எடுத்துக் கூறியதாகவும் இதனைத் தொடர்ந்தேஇங்குபௌத்த பிக்குகள் கோஷ்டியொன்று மீண்டும் வரவிருப்பதாகவும் தெரியவருகிறது.

---

## ஆஸ்பத்திரி வேலைகளுக்கு

இலங்கையில் ஆஸ்பத்திரி வேலைகளுக்காக ஒதுக்கப்பட்ட பணம் 5 கோடியே ஐம்பது லட்சம் ரூபா செலவு செய்யப்படாமலேயே இருக்கிறது. ஒதுக்கப்பட்டுள்ள பணம் முழுவதும் செலவு செய்யப்பட்டு தற்போதுள்ள வேலைகள் பூர்த்தியான பின்புதான் புதிதாகப் பணம் ஒதுக்கப்படும். சுகாதார மந்திரி திரு. ஈ. எல். சேனநாயக்கா மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

---


★ புகையிலை ★ வெங்காயம் ★ உருளைக்கிழங்கு ★ மிளகாய்
★ கத்தரி ★ கோவா ★ திராட்சை

ஆகிய மற்றும் பயிர்களைப் பாதிக்கும் எல்லா பூச்சி, புழுக்களை அழிக்கும்

மிகவும் சக்திவாய்ந்த கிருமிநாசினி

BAYER

பொலிடோல்

மற்றும் நாசினி * மெற்றசிஸ்டொக்ஸ் * பொலித்தியோன் * டிப்டறெக்ஸ் * அன்றக்கோல் * குப்றுவிற் * லெபேசிட் * செரசான் * டக்தல்

தற்பொழுது பெற்றுக்கொள்ளக்கூடிய இடங்கள்:

புறேவின்ஷல் டிஸ்றிபியூட்டாஸ் — ஓட்டோ கட்டிடம் யாழ்ப்பாணம், தொலைபேசி: 244 & 628

வடபகுதி விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவுச் சமாசம் — இல. 111, பிரதான வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 504


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம் சமாளிக்க வேண்டிய பெரிய சவால்

## ஜனாதிபதி எச்சரிக்கை

புதுடில்லி, மார்ச் 3

'வேலையில்லாத் திண்டாட்டம் எனும் சவாலை பாரதம் உடனேயே சமாளித்தாக வேண்டியதொரு நிலையிலிருக்கிறது. இதற்கான தீவிர நடவடிக்கை எடுக்கப்படாவிடில் லட்சக்கணக்கான மக்கள் அவதிக்குள்ளாக வேண்டிய நிலை ஏற்படும். இப்பிரச்னைக்குத் தீர்வு காண்பதில் காந்திஜி காட்டிய வழியைப் பின்பற்றுவது நல்ல பலனை அளிப்பதாக இருக்கும்' என பாரத ஜனாதிபதி டாக்டர் சாகிர் ஹுசேன் கதர் தொழிலாளர் மத்தியில் பேசுகையில் குறிப்பிட்டார்.

டாக்டர் சாகிர் ஹுசேன் மேலும் பேசுகையில் கூறியதாவது:

பெரிய தொழிற் சாலைகளால் வேலையின்மைப் பிரச்னைகளுக்குத் தீர்வு கண்டுவிட முடியாது.

லட்சக்கணக்கான மக்கள் வேலையற்றிருப்பது ஜனநாயகத்துக்கே பெரிய சவாலாக இருக்கும். வேலையற்றிருப்பவர்களுக்கு ஏதேனும் ஒருவகையில் உதவக்கூடியதாக உதவித் தொகை வழங்குவதுபற்றி பரிசீலனை செய்யப்படுவதும் நல்லது.

சிறுகைத் தொழில்களை ஆரம்பித்து வேலையற்றிருப்பவர்களுக்கு வேலை வழங்கவும் நடவடிக்கை எடுப்பது இப்பிரச்னைக்கு தீர்வு காண்பதில் ஓரளவு உதவும் எனவும் அவர் எடுத்துக் கூறினார்.

# தென்னக்கோன் ராஜினாமா செய்வார்?

கொழும்பு, ஞாயிறு

பார்லிமெண்டில் 'சிங்களம் மட்டும்' இயக்கம் ஆரம்பித்துள்ள நிக்கவரட்டியா எம். பி.யான பொடிபுத்தா திரு. முதியான்சே தென்னக்கோன் இப்பிரச்னையை முன்வைத்து தமது பார்லிமெண்ட் அங்கத்தவர் பதவியையும் ராஜினாமாச் செய்யவிருப்பதாகக் கூறப்படுகிறது.

இப்பிரச்னை காரணமாக எதிர்க்கட்சியிலிருந்து ராஜினாமாச் செய்து எதிர்க்கட்சியில் சுயேச்சை எம். பி.யாக இருக்கும் திரு. தென்னக்கோன் இம்மாதம் 5-ந் திகதி நடைபெறவிருக்கும் 'சிங்களம் மட்டும்' கூட்டத்தில் தமது ராஜினாமா பற்றி அறிவிப்பாரெனத் தெரியவருகிறது. ஜயவர்த்தனபுர தேவாலய மண்டபத்தில் இக்கூட்டம் நடைபெறவிருக்கிறது.

இக்கூட்டத்தில் திரு. ஆர். ஜி. சேனநாயகா, திரு. எம். கே. தென்னக்கோன், சோமவீர சந்திரசிறி, பிரின்ஸ் குணசேகரா ஆகியோரும் கலந்து கொள்வாரென எதிர்பார்க்கப்படுகிறது.

இதேசமயம் திரு. முதியான்சே தென்னக்கோனின் 'சிங்களம் மட்டும்' இயக்கத்தை ஆதரித்து திரு. எஸ். டி. பண்டாரநாயகாவும் திரு. சண்முகதாசனும் ஓர் அறிக்கை வெளியிட்டுள்ளனர். இதில் சிங்களம் வேண்டும் என்று கூறுவோர் உண்மையில் சிங்களத்தின் மீது அக்கறை கொண்டிருக்கவில்லையென்றும் அவர்கள் ஆங்கிலத்தின் மீதுதான் மோகமுள்ளவர்களென்றும் தெரிவித்துள்ளனர்.

### யாருக்கு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இடம் பற்றி இன்னும் முடிவு செய்யப்படவில்லை.

தெற்கு, மத்திய, ஊவா மாகாணங்களில் தங்கள் அபேட்சகர்களையே பெரும்பாலான தொகுதிகளில் நிறுத்த வேண்டுமென லங்கா சமசமாஜக் கட்சியினர் கேட்டுள்ளதாகவும் இரத்தினபுரித் தொகுதிக்கு தங்கள் அபேட்சகரையே நிறுத்த வேண்டுமென கம்யூனிஸ்ட் கட்சி கேட்டிருப்பதாகவும் தெரியவருகிறது. இதே சமயம் முன்னைய தேர்தலில் வெற்றி பெற்ற தனது தொகுதிகளையும் அதற்கு முன்னர் தமது வசம் இருந்த தொகுதிகளையும் தங்களுக்கே விட்டுவிட வேண்டுமெனவும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கேட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

1965-ம் ஆண்டில் லங்கா சமசமாஜக் கட்சி 34 ஸ்தானங்களில் போட்டியிட்டு 10 ஸ்தானங்களிலும், கம்யூனிஸ்ட் கட்சி 9 ஸ்தானங்களில் போட்டியிட்டு 4 ஸ்தானங்களிலும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி 100 ஸ்தானங்களில் போட்டியிட்டு 41 ஸ்தானங்களிலும் வெற்றியீட்டியிருந்தன.


## டாக்டர் சண்முகரத்தினத்தாரின் ஆயுர்வேத சிகிச்சை நிலையக் கிளை

யாழ்ப்பாணம் மெயின் வீதியில் இருந்த கிளை, இன்று தொடக்கம் பின்வரும் விலாசத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

### சப்பெல் வீதி

(3-ம் குறுக்குத்தெருச் சந்தி)

கொழும்பு ஆயுர்வேதக் கல்லூரியின் முன்னாள் விரிவுரையாளர் டாக்டர் ஏ. சபாபதிப்பிள்ளை, எல். ஐ. எம். (சென்னை) அவர்கள் மேற்படி சிகிச்சை நிலையத்திற்குப் பொறுப்பாகவிருப்பார்.

நோயாளிகளைப் பார்க்கும் நேரம்:

காலை: 8-00 — 10-00 மணி
மாலை: 5-00 — 8-00 மணி
(போயா நாட்களைத் தவிர)

ஆயுர்வேத சிகிச்சை நிலையம்,
55, சிவன்கோவில் மேலை வீதி,
யாழ்ப்பாணம். 475


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1968-ம் ஆண்டு மார்ச்மாதம் 4-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

### இன்று

யாழ்ப்பாணம், திங்.

சுழிபுரம் பறுளை ஸ்ரீ சிவசுப்பிரமணியசுவாமி கோவிலில் இன்று 6 மணிக்கு பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி 'தமிழ்த் தெய்வம்' என்னும் பொருள்பற்றி சொற்பொழிவு நிகழ்த்துவார்.

### கச்சதீவு..............

[1-ம்பக்கத் தொடர்ச்சி]

னைகள் பற்றி ஆராயப்பட்டதாகத் தெரியவருகிறது.

இலங்கையிலுள்ள ரோமன் கத்தோலிக்கச் சபையின் ஆதிக்கத்தில் இத்தீவு இருந்துவந்துள்ளதாகவும், இச்சபையின் யாழ்ப்பாணக்கிளையின் கீழ் நெடுந்தீவு சுவாமியாரின் ஆதிக்கத்தில் இருந்து வந்துள்ளதாகவும் இலங்கையின் சார்பில் எழுத்திலுள்ள ஆதாரங்கள் இந்திய தூதரிடம் காட்டப்பட்டதாகவும் தெரிகின்றது. இலங்கையின் நில அளவைப்பகுதியினரிடமுள்ள நிலங்கள் பற்றிய படங்களில் இத்தீவு ஊர்காவற்றுறைப் பிரதேசத்தின் ஒரு பகுதியாகக் குறிக்கப்பட்டிருப்பதாகவும் ஆதாரம் காட்டப்பட்டுள்ளது.

### விசாரணை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், திங்.

மட்டுவில் கொலை வழக்கு நேற்று காலை வட பகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் டாக்டர் ஏச். டபிள்யூ தம்பையா கியூ சி. முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது. நீதியரசர் விசாரணையை ஏப்ரல் 20-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

இவ்வழக்கில் சாவகச்சேரியைச் சேர்ந்த மட்டுவிலில் 67-ம் ஆண்டு பெப்ரவரி 18-ம் திகதி சுப்பன் தம்பன், தம்பன் சின்னப்பு ஆகியோர் சின்னத்தம்பி என்பவரை கொலை செய்ததாக குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

### அசிட்.....

1ம் பக்கத் தொடர்ச்சி

ரணை செய்யப்பட்டு நேற்று மாலை தீர்ப்பு வழங்கப்பட்டது. தீர்ப்பை அறிவதற்காக கோர்ட்டில் ஏராளமானோர் திரண்டிருந்தனர்.

இவ் வழக்கில், தெல்லிப்பளையில் 65-ம் ஆண்டு நவம்பர் மாதம் 27-ம் திகதி சின்னத்தம்பி செல்லையா என்பவர், பாலசிங்கம் மனைவி அற்புதம் மீது திராவகப் பொருள் வீசி கொலை செய்ய முயற்சித்ததாகவும் பாலசிங்கத்திற்கு காயம் விளைவித்ததாகவும், குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

எதிரி சார்பில் புறக்டர் எஸ். சிறிதரன், புறக்டர் வீ. சிவபாத சுந்தரலிங்கத்தின் அனுசரணையுடன் ஆஜரானார். முடிக்குரிய தரப்பில் அட்வகேட் சுனில் டீ. சில்வா ஆஜரானார்.

ஜூரி சபையினர் சுமார் 1 மணிநேரம் தனிமையில் கூடி மந்திராலோசனை செய்தபின் 6—1 ஆக பிரிந்து தீர்ப்பளித்தனர். எதிரி கைமோசக் கொலை முயற்சியில் குற்றவாளியென்றும், காயம் விளைவித்த குற்றசாட்டில் குற்றவாளியென்றும் தீர்ப்பளித்தனர்.

நீதியரசர் 1-வது குற்றச்சாட்டிற்கு 4 வருடமும், இரண்டாவது குற்றச் சாட்டிற்கு 1 வருடமுமாக, இரண்டு குற்றச் சாட்டுகளும், ஏக காலத்தில் அனுபவிக்க வேண்டுமென்று தீர்ப்பளித்தார்.

அசைஸ் விசாரணை 7-ம் திகதி மீண்டும் ஆரம்பமாகும்.

# கிராமசபை கணக்கில் ஊழல் கண்டுபிடிப்பு

யாழ்ப்பாணம், திங்.

வடபகுதியிலுள்ள கிராம சபையொன்றில் ஒழுங்கீனமாகச் செலவு செய்யப்பட்ட சுமார் 16,000 ரூபா பண ஊழலை கணக்குப் பரிசோதனைக் குழுவினர் கண்டுபிடித்துள்ளதாகத் தெரிகின்றது.

1964-ம் ஆண்டில் இங்கு நடைபெற்றதாகத் தெரிவிக்கப்பட்ட இந்த ஊழல் சம்பந்தமாக விசாரணை செய்த குழுவினர் இதுசம்பந்தமான தஸ்தாவேஜுகளை உள்ளூராட்சி அமைச்சுக்கு அனுப்பி வைத்துள்ளனர். இதுபற்றி எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை வடபகுதி உள்ளூராட்சி ஆணையாளர் திரு எஸ். முருகவேள் மேற்கொள்வதற்காக உள்ளூராட்சி அமைச்சர் திரு. எம். திருச்செல்வத்துடன் தொடர்பு கொண்டுள்ளார்.

இதுசம்பந்தமான விசாரண அறிக்கைகளை உள்ளூராட்சி அமைச்சர் நிரந்தரக் காரியதரிசியிடம் கையளித்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

[ஈா. நி.]

# போலின் மீதான சதிக்குற்றம் வாபஸ்

## கொலை குற்றத்தின் மீது விசாரணை தொடர்கிறது

கொழும்பு, ஞாயிறு

கிரிம்பக்கந்த கொலைவழக்கின் முதல் எதிரியான செல்வி போலிடிகுருஸ் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளில் சதி செய்ததான குற்றச் சாட்டு இன்று வாபஸ் பெறப்பட்டது.

இந்த வழக்கில் இரண்டாம் எதிரியாக விருந்த கொலையுண்ட சிறுவனின் தந்தை கிரிம்பத்தந்த அண்மையில் விடுதலை செய்யப்பட்டார்.

போலின் மீதுள்ள சதிக் குற்றச்சாட்டை விலக்கிக் கொள்ள விரும்புவதாக முடிக்குரிய வழக்கறிஞர் திரு ஏ. சி. டி சொய்ஸா இன்று கோட்டில் விண்ணப்பித்துக் கொண்டார். கோர்ட் அங்கீகரித்தது. போலின் மீதான கொலைக் குற்றத்தின்மீது இப் பொழுது விசாரணைத் தொடர்கின்றது.

### இல்லை என்று...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

இறக்குமதி செய்கின்றனர். இப்பாலுணவை இலங்கை அரசாங்கம் சனத்தொகை விகிதாசாரப்படி, மாகாண ரீதியாக வழங்கத்திட்டமிட்டுள்ளது. யாழ்ப்பாணப் பகுதிக்கு ஐந்து ஸ்தாபனத்திற்கு மாத்திரம் இப்பாலுணவு வழங்கப்படுகிறது. அதை நாங்கள் விரும்பியபடி கொடுக்க முடியாமல் இருக்கிறது.

யூனியன்களுக்கும், சங்கங்களுக்கும், அதன் மூலம் கூப்பன் கடைகளுக்கு மட்டுமே வழங்கவேண்டும். குழந்தைக் கூப்பன் உள்ளவர்களுக்கு மட்டுமே வழங்க வேண்டும். அத்துடன் காரியாதிகாரி ஆகியோர் வழங்கிய பெமிட்டுகளுக்கும்வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் உள்ளூர்களில் உள்ளவர்கள் அனேகமானோர் இதைப் பெறுவதில்லை இதனால் யூனியன்களும், சங்கங்களும் நெஸ்பிறேயைஎடுக்க முன்வருவதில்லை. 'நெஸ்பிறே' உண்மையில் தேவையானவர்கள் பெறுவதில்லை என்றே சொல்லவேண்டும். ஆகவேஇனி உண்மையிலேயே தேவையானவர்களுக்கு 'நெஸ்பிறேயை' வழங்கும் திட்டத்தை வகுக்க வேண்டியது அவசியமாகும்.

[இமை-நி]

### காப்புறுதிக் கூட்டுத்தாபனம்

கொழும்பு, ஞாயிறு

இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம் ரூ 129970170க்கு காப்புறுதிகள் பூர்த்தி செய்திருக்கின்றது.

விவசாயிகளுக்கு விளைபொருட்களின் காப்புறுதிக்கென விவசாய இன்சூரன்ஸ் பிரிவு ஒன்றையும் விரைவில் ஆரம்பிக்க முடிவுசெய்யப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

### விபத்தில் சிக்கிய சிறுவன் ஆஸ்பத்திரியில்

அளவெட்டி, ஞாயிறு

காங்கேசன்துறை பலாலி வீதியில் நடைபெற்ற கார் விபத்தில் சிக்கிய பிரான்சிஸ் மனோகரதாஸ் என்னும் 6 வயது சிறுவன் படுகாயத்துக்குள்ளாகி யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

சிறுவனை மோதியதாகச் சொல்லப்படும் காரின் சாரதியைபொலிசார் கைது செய்து பின் பிணையில் அனுமதித்தனர். கார் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளது.

### வவனியா பஸ் நிலையத்தில் முடிச்சுமாறிகள் நடமாட்டம்

வவனியா, ஞாயிறு

வவனியா பஸ் நிலையத்தில் இப்போது முடிச்சுமாறிகள் (பிக்பாக்கெட்டுகள்) நடமாட்டம் அதிகரித்து வருவதாகத் தெரிகிறது.


## S. R. S.

## ஜவுளிமாளிகையில்

லங்கா விலை

ஒளவையார் சேலை 20-00
டெக்கா சேலை 20-00

எஸ். ஆர். செல்லத்துரை
216, காங்கேசன் துறைவீதி, யாழ்ப்பாணம்.
போன்: 269


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org